
# வெற்றியின் பங்காளிகள்

விமலதாஸ முதாகே

தமிழாக்கம்:

திக்குவல்லை கமால்



# வெற்றியின் பங்காளிகள்

**அறுவடை** - சிங்களத்திலிருந்து தமிழாக்கம் செய்யப்பட்டவை

---

* குருதட்சணை - தெனகம சிரிவர்தன (2008)
* தொடரும் உறவுகள் - சிட்னி மாகஸ் டயஸ் (2009)
* குறும்புக்கார குரங்குக் குட்டி- டப்ளியு.டீ. மெடில்டா அதிகாரம் (2009)

# வெற்றியின் பங்காளிகள்

சிங்கள மூலம்:

விமலதாஸ முதாகே

தமிழாக்கம்:

திக்குவல்லை கமால்

வெளியீடு:

தோதென்ன வெளியீடு

உடஸ்வெவ வீதி

ஆனமடுவ.

தொலைபேசி: 032-2263446

வெற்றியின் பங்காளிகள்

விமலதாஸ முதாகே

முதல் பதிப்பு - 2009

தோதென்ன வெளியீடு

பக்கம்: vi+82

மொழி பெயர்ப்பு:
திக்குவல்லை கமால்

கணினி எழுத்தமைப்பு:
சோ. சாந்தகுமாரி

அட்டை, உட்பக்க ஓவியங்கள்:
ஆரியசிரி விமல்

அச்சுப்பதிவு
ஜயன் பிரின்ட் கிராஃபிக்ஸ்
52 A/1 கலஹிடியாவ
கணேமுல்ல.

வெளியீடு:
தோதென்ன வெளியீடு
உஸ்வெவ வீதி
ஆனமடுவ
இலங்கை.

தொ.பேசி - 0322263446

Vetriyin Pangaligal

Vimaladasa Mudage

First Print- 2009

Thothanna Publications

Page: vi+82

Translated By:
Dickwelle Kamal

Type Setting:
S. Santhakumari

Cover Designed &
Illustrated by:
Ariyasiri Wimal

Printed By:
Jayan Print Graphics
52A/1, Galahitiyawa
Ganemulla.

Published By:
Thothanna Publication
Uswewa Road,
Anamaduva
Sri Lanka.

T.P: 0322263446

ISBN: 978- 955-1848-26-2

## திறவு கோல்:

தமிழில் இளைஞர் இலக்கியமென்ற துறை வளர்ச்சி பெற வில்லை. சகோதர மொழியில் நிறையவே இத்தகைய நூல்கள் வந்தவண்ணமுள்ளன. அவற்றுள் சிலவற்றையேனும் தமிழுக்குக் கொண்டு வருவது அவசியமான பணியாகும்.

விமலதாஸ முதாகேயின் 'தயாசேன போன்றோரின் வெற்றி' அத்தகையதொரு இளைஞர் நாவல். இதனை **'வெற்றியின் பங்காளிகள்'** என்ற தலைப்பில் மொழி பெயர்த்துள்ளேன்.

இதனை வெளியிட முன்வந்த தோதென்ன பதிப்பகத்தினர், தமிழ் சிங்கள் ஆக்க இலக்கியங்களை பரஸ்பரம் மொழி பெயர்த்து வெளியிடுவதில் ஆர்வத்தோடு செயற்படுகின்றனர்.

தரமான சிறுவர்- இளைஞர் இலக்கிய நூல்கள், கையெழுத்துப் பிரதிகள் கிடைக்கும் பட்சத்தில் அவற்றை மொழி பெயர்த்து, அச் சிட்டு வெளியிட மிகவும் விருப்பம் கொண்டுள்ளனர். தமிழ் இலக்கிய வாதிகள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள முன்வர வேண்டும்.

சம்பந்தப்பட்ட சகலருக்கும் நன்றி

இலக்கிய தாகமே இமய தாகம்.

திக்குவல்லை கமால்
2009.08.30

104- Atulugama,
Bandaragama- 12530,
Sri Lanka.
Email: Dickwelle Kamal@gmail.com.
T.P: 0716386955, 0382292118

## தோதென்ன
## வெளியீட்டுப் பணிக்கூற்று

முழுமையான மனிதனொருவனை உருவாக்குவதாயின்
சிறுவர்களுக்கு அர்த்தம் மிகுந்த இளமைப் பருவம்
வாய்த்தாக வேண்டும்.

இளமைப் பருவம் ஒவ்வொரு மனிதனையும் நிழல் போல் பின்
தொடர்ந்து அவனது வாழ்வை வடிவமைக்கும் வல்லமை
கொண்டதென்பதை நாம் நம்புவோம்.

முழுமையான மனிதனொருவனை உருவாக்குவதற்காக அவனது
இளமைப் பருவத்தை அர்த்தம்
மிகுந்ததாக்க வேண்டும்.

எனவே அர்த்தம் மிகுந்த இளமையை அனுபவிப்பதற்கு முதலிடம்
வழங்குவதன் மூலம் சிறுவர் அபிவிருத்தியை முன்னெடுப்போம்.

# 1



ஆற்றங்கரையிலிருந்து மண் நிரப்பிக் கொண்டு வந்த லொறி இரைச்சலுடன் மேற் பாதைக்கேறியது. அது தை மாத காலப் பகுதி. வல் பிட்ட தோட்டத்து இலையுதிர்த்த றப்பர் மரத் தண்டுகளுக்கு மேலால் சூரியன் பிரகாசித்தது. கிங்கங்கையின் வெட்டு வாய்க்கால் மருங்கோடு அமைக்கப்பட்டிருந்த பெரிய பாதையினூடாக புழுதி கிளப்பிக் கொண்டு அந்த லொறி செல்வதை, எந்தவித உணர்வுமற்றவனாகப் பார்த்துக் கொண்டிருந்தான் தயாசேன.

கிங்கங்கை வரம்போர செங்கல் சூளையிலிருந்து மேற்கிளம்பிய புகை பூதம் போல் உயர்ந்து உயர்ந்து பரவியது. வரட்சியினால் வற்றிப் போயிருந்த பெருங் குழிகளுக்கருகில் மீன் கௌவுவதற்காக கொக்குகள் தவங்கிடந்தன.

வக்வல்லைப் பக்கமிருந்து வந்த வேன் ஒன்று தயாசேனவின் வீட்டுக்கு முன்பாக நிறுத்தப்பட்டது. பாதைப் படகு மூலமாக மண் கரை போடுவதைப் பார்த்துக் கொண்டிருந்த அவன் தனது தம்பியைக் கைதட்டிப் பேசினான்.

"தம்பி...... தம்பி..... எங்க வீட்டுக்கு யாரோ வந்திருக்காங்க. அங்க பார்..... பால் நிற வேனொன்று......"

விரலை நீட்டி வேனைக் காட்டிய தயாசேன, வீட்டுப் பக்கமாக ஓடத் தொடங்கினான். தம்பி சுனிலும் கூடவே அவன் பின்னால் ஓடினான்.

கறுப்புக் கண்ணாடி அணிந்த ஒரு அம்மையார் வீட்டு விறாந்தையிலிருந்து அம்மாவுடன் வேன் பக்கமாக வந்தார்.

தயாசேனவும் சுனிலும் சற்று நின்று ஆச்சரியத்துடன் பார்த்தனர்.

''பெரியவன்.... எங்கட மரத்தால் இரண்டு மூன்று இளநீர் பிடுங்கு''

தம்பியுடன் பின்பக்கமாகச் சென்ற தயாசேன, ஐந்து இளநீர் பிடுங்கிக் கொண்டு வந்தான்.

''அப்படியே இரண்டு காய் வெட்டிக் கொண்டே வா''

வெட்டிய இளநீரை அம்மாவின் கையில் கொடுத்த தயாசேன ''இது யாரம்மா?'' என்று வந்திருந்த அம்மையாரைப் பற்றி விசாரித்தான்.

இளநீரை கையிலெடுத்த கண்ணாடிக்காரி ஒரு மிடறு சுவைத்துக் குடித்தாள்.

''ஷ.... வெரி நைஸ்''

அவள் அவ்வாறு சொன்னபடி வாகனச் சாரதியோடு மெல்லச் சிரித்தாள்.

''நீண்ட காலமாகவே இங்கே வரவேணுமென்று நினைத்துக் கொண்டிருந்தன் கமலா-'' மாமர நிழலில் அமைக்கப்பட்டிருந்த பலகை வாங்கில் அமர்ந்தபடி சொன்னாள்.

தங்கை அம்மாவோடு அணைந்தபடி முனங்கத் தொடங்கினாள். புதியவர்களின் வரவு காரணமாக அவள் அமைதியழந்து காணப்பட்டாள். அம்மா அவளைத் தூக்கிக் கொண்டாள்.

வலக்கை பெருவிரலாலும் சுட்டு விரலாலும் கவனமாகக் கண்ணாடியைக் கழற்றியெடுத்து இடக்கையிலிருந்த கைக்குட்டையால் அதனைத் துடைத்தாள். மீண்டும் கறுப்புக் கண்ணாடியை அணிந்து கொள்ள முனைந்த அவள், தங்கையை ஓரக் கண்ணால் அவதானித்தாள்.

''இது நல்ல பழக்கமல்ல கமலா, இப்ப இவள் சின்னப் பிள்ளையா... இல்லயே''

''இவள் கொஞ்சம் பயந்தவள் அக்கா''

''நான் கல்கிஸ்ஸ ஹோட்டலொன்றிலிருக்கும் போது, ஜேர்மன் சோடியொன்று இரண்டு பிள்ளைகளோடை வந்தாங்க. ஒன்றுக்கு ஐந்து வயதிருக்கும். அடுத்ததுக்கு ஆகக் கூடினால் ஒன்றரை வயதிருக்கும். இரண்டு பேரயும் நீச்சல் தடாகத்தில் விட்டாங்க. எந்தப் பயமுமில்லாமல் நன்றாக நீந்தி விளையாடினாங்க.''

''ஐயோ இவளை ஆற்றுக்குக் கூட்டிச் சென்றாலும் குளிப்பாட்டுவது ரொம்பக் கஷ்டம். சத்தம் போடுவாள்''- அம்மா கூறினாள்.

''ஆ பார்த்தீங்களா? அதிகம் செல்லம் கொடுக்கக் கூடாது. ம்.... அதுசரி நான் கமலாவுக்குக் கடிதமொன்றனுப்பினன் கிடச்சிருக்குமே.''

''ஓம் நாங்கள் ரொம்ப சந்தோஷப்பட்டோம்''

''கொஞ்ச நாள் இங்க தங்கலாமென்று வந்தன்.''

''எவ்வளவு நல்லது''

''சுணங்குதா சைமன்? இனி ஏதாவது சாப்பிட்டுவிட்டே போகலாம் என்ன?''

அவன் எதுவும் சொல்லவில்லை. பெருவிரலால் நிலத்தைக் கிளறியபடி நின்றான்.

அம்மையார் கவனமாக அடிவைத்து சற்றுத் தூரம் முன்னே நடந்தார். சாரதியும் அவள் பின்னால் சென்றான்.

''இது யாரம்மா?''- தயாசேன அங்குமிங்கும் பார்த்தபடி கேட்டான்.

''உறவு முறைப்படி பார்த்தால், அப்பாவின்ற அக்கா. உங்களுக்கு மாமி''

''நானென்றால் ஒருநாளும் கேள்விப்படவில்லை.''

''உங்க அப்பாவின் மூன்றாம் மாத தானத்துக்கு வந்தவ. அப்போது தயாசேன சின்னப்பிள்ளை. அதன் பிறகு இப்போது தான் வந்திருக்கா. நீங்கள் டீச்சர் மாமியென்றுதான் சொல்லணும்''

தயாசேனவும் சுனிலும் கைளால் வாயை மூடிக் கொண்டு "ஹிகி ஹிகி" யென்று சிரித்தனர். உதடுகளுக்கு குறுக்கே சுட்டு விரலை வைத்து, வாயை மூடிக் கொள்ளும்படி அம்மா எச்சரித்தாள்.

டீச்சர் அக்கா வருவதாக அறிவித்ததிலிருந்து கமலா மெல்ல மெல்ல அதற்குத் தயாரானாள். அர்னோலிஸ் மாமாவின் மரத்திலிருந்து பிஞ்சுப் பலாக்காய் பறித்துக் கொண்டாள். சுனிலையும் தயாசேனவையும் அனுப்பி வெட்டுவாய்க்கால் கிழங்கு கொண்டு வரச் செய்தாள். மத்து அண்ணாவிடம் தயிர்ச் சட்டியொன்றும் செய்தெடுத்தாள்.

அக்கம் பக்கம் பிள்ளைகளும் டீச்சர் மாமியின் வரவை ஆவலோடு எதிர் பார்த்திருந்தனர்.

வேன் கபில நிறக் கண்ணாடியால் மூடப் பட்டிருந்ததால் உள்ளே எதையும் அவதானிக்க முடியவில்லை.

தயாசேனவும் சுனிலும் சூழவர நின்ற பிள்ளைகளைப் பெருமையுடன் பார்த்தனர்.

சிவப்பு முதலாளியின் மகன் மஞ்சுல தயாசேனவையும் சுனிலையும் தலையாட்டி அழைத்தான். தயாசேன தம்பியுடன் அவனருகே சென்றான்.

"அது யார்டா?"

பாதையருகே நின்ற டீச்சர் மாமியைக் காட்டி மஞ்சுல விசாரித்தான்.

"அது எங்கட டீச்சர் மாமி"

அண்ணனுக்குப் பதிலாக சுனில் பதில் சொன்னான்.

"எந்தப் பள்ளிக்கூடத்தில படிப்பிக்கிறா?"

"எந்தப் பள்ளிக்கூடமண்ணா?"

சுனில் தன்னிடம் கேட்ட கேள்வியை தயாசேனவின் பக்கம் திருப்பினான்.

"இது..... இது......"

"காலியுள்ள எங்கட கடைக்கும் இப்படி ஆக்கள் வருவாங்கள். சுறாக் கருவாடு ஐம்பதும் கௌபி நூறும் சீனி நூறும் தான் கொண்டு போவாங்கள்"

வாங்கும் பொருட்களின் பட்டியலைக் கூறியபடி இடக்கை விரல்களை மடித்தான் அவன்.

''எங்களுக்குப் பெரும காட்டாம சும்மா இரு தயாசேன''

சுற்றி நின்ற கூட்டாளிமார் வயிற்றைப் பிடித்தபடி சிரித்தனர்.

இதனைக் கண்ட கமலா தனது பிள்ளைகளைக் கூப்பிட்டாள்.

''இங்க வா தயாசேன.... தம்பியையும் கூட்டிக் கொண்டு வா''

''இருவரும் அம்மாவை நெருங்கினர்''

''காலியில் பெரிய பள்ளிக்கூடத்துக்குப் படிக்கப் போனாலும், மஞ்சுல பழகுவதற்கு நல்லவனல்ல''

தயாசேனவுக்கு மாத்திரம் கேட்கக் கூடிய விதமாக அவள் தாழ்ந்த குரலில் சொன்னாள்.

எண்பத்திரண்டு வேலை நிறுத்தத்தில் சம்பந்தப்பட்ட தயாசேனவின் தகப்பன், சிவப்பு முதலாளியின் கடைக்கு இரண்டாயிரம் ரூபா அளவில் கடன்பட்டிருந்தார். வேலை நிறுத்தம் முடிந்த பின்னர், கடன் கொடுக்க சற்று தாமதித்த போது மஞ்சுலவின் அப்பா வீட்டு முற்றத்திற்கே வந்தி திட்டிய விதம் இன்று நேற்று நடந்தது போல் கமலாவுக்கு ஞாபகம். எந்தக் காரணம் சொல்லியும் தப்ப முடியாத நிலையில், கல்யாண மோதிரத் தையும் செய்னையும் அடகு வைத்து இரண்டாயிரம் ரூபா எடுத்துக் கடைக் கடன் அடைத்ததை அவள் நினைவு மீட்டிப் பார்த்தாள். பின்னர் அதனை மீட்டெடுக்க முடியாமல் போனது ஞாபகம் வந்தபோது அவளால் கவலை தாங்க முடியவில்லை.

பகல் பன்னிரண்டு மணிக்கு வல்பிட தோட்டத்தில் மணியொலிப்பது கமலாவுக்குக் கேட்டது.

''டீச்சர் மாமிய சாப்பிட வரச் சொல்லு தயாசேன''

''என்னால முடியாது தம்பிக்குச் சொல்லுங்கோ''

''ம்... நாய்க்குச் சொன்னா.... நாய் வாலுக்கு சொல்லுமாம். சரி சாப்பாட்டு மேசையை தயார் பண்ணச் சொல்லி யசவதி மாமிக்காவது சொல்லு''

தயாசேனவும் சுனிலும் அந்தத் தகவலை யசவதி மாமிக்குச் சொல்வதற்காக வீட்டுக்குள் சென்றனர்.

கமலா மகளை அணைத்துக் கொண்டு கொஞ்சத் தூரம் சென்றாள். டீச்சர் அக்காவைச் சாப்பிட வருமாறு ஞாபகமூட்டினாள்.

"சாப்பிட இன்னும் நேரமாகவில்லை. என்ன செய்வது? பாவம்.... சைமன் கொழும்புக்குப் போக வேணுமே.... சரி போவோம்"

ஜயஸேகர அம்மா முன்னே நடந்தாள்.

"இதென்ன யானைக்குட்டியொன்றத் தூக்கிக் கொண்டு"

"இவள் இப்படித்தான்"

தான் தவறு செய்கின்ற உணர்வோடு தான் கமலா அவ்வாறு சொன்னாள்.

வெள்ளை விரிப்பிட்டு உணவு மேசையை யசவதி ஒழுங்கு செய்திருந்தாள்.

"ஊர்க் காய்கறிக்கு விருப்பமிருக்குமே. அதனால கடையால் எதுவுமே வாங்கல்ல"

சாப்பாட்டைப் பகிர்ந்தபடி டீச்சர் மாமி அதுபற்றி கமலாவிடம் வினவினாள்.

"இதென்ன சாமான்?"

"இது ஆற்றுக் கிழங்கு"

"மைகோட். நான் இன்றைக்குத் தான் சாப்பிடுறன்."

தயாசேனவும் சுனிலும் கண்களை அகற்றாமல் டீச்சர் மாமியைப் பார்த்தபடியே நின்றனர். யசவதிக்கு எதையுமே புரிந்து கொள்ள முடியவில்லை.

"இவன்தானா மூத்தவன்?"

"ஓம்"

தாயின் பதில் இது.

"எத்தனையாம் தரம்?"

''ஆ.....''

கமலா மனதுக்குள் கணக்குப் பார்த்தாள்.

''எட்டாம் தரம்''

அம்மாவை முந்திக் கொண்டு தயாசேன சொன்னான்.

''சின்னவன்...?''

டீச்சர் மாமி மேலும் கேள்வி அடுக்கினாள்.

''சின்னவன் தரம் ஐந்து. புலமைப் பரிசில் எழுத இருக்கிறான்''

''அப்படியென்றா முயற்சியோடு படிக்கணும்''

''பிள்ளைங்களுக்கு டீச்சர் மாமியிடம் இனித் தேவையானதைக் கேட்டுக் கொள்ளலாம்''

நிலைப்படியில் சாய்ந்து நின்ற யசவதிக்குக் கேட்கும்படியாக கமலா சொன்னாள். டீச்சர் மாமி தலையாட்டி அதனை அனுமதித்தாள்.

''நல்ல வளமான பிரதேசம்'' இவ்வளவு நேரமும் அமைதியாக சாப்பிட்டுக் கொண்டிருந்த சாரதி சொன்னான்.

''இங்க ஒரு பேசஸ் காணி எவ்வளவு கமலா?''

''ஆயிரம் ரெண்டாயிரம் ரூபா அளவுதான்''

''மை கோட். எனக்கு காணித் துண்டொன்று வாங்கணும் போலிருக்கு சைமன்''

கமலாவுக்கு பெரிதும் மகிழ்ச்சியேற்பட்டது. தனக்கு உதவியாக டீச்சர் அக்காவின் வரவு எவ்வளவு அதிர்ஷ்டமானதென்று அவள் எண்ணினாள்.

சாப்பிட்டதைத் தொடர்ந்து டீச்சர் மாமி வாசல் சாய்கதிரையில் அமர்ந்து உடலைத் தளரச் செய்தார்.

''சைமன்.... என்ற ஹேன்ட் பேக்கில் செல்டெல் இருக்கும். அதைக் கொஞ்சம் எடுங்களன்''

சுனிலும் தயாசேனவும் செலியூலர் தொலைபேசியை ஆச்சரியம் பொங்கப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

டீச்சர் மாமி தொலைபேசிக்குக் காது கொடுத்துக் கதைக்க ஆரம்பித்தார்.

''ஹலோ குட் ஐ ஸ்பீக் டு மெடம் திஸேரா?''

சுனிலுக்கும் தயாசேனவுக்கும் எதுவுமே புரியவில்லை. மேசையை ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்த யசவதி மாமி கண்களை விரித்தபடி பார்த்துக் கொண்டிருந்தாள்.

''ஆ மெடம் திஸேரவா..... நான் ஜயசேகர....... காலிப் பக்கம் வந்தன்..... ஓம்..... ஓம்.....''

''சரி டு தவுஸன்ட் எனக்கு மீதி.... யேஸ்.... யேஸ்.... ஸீயு..... செரியோ''

''இதில் கதைக்கப் போனால் செலவு அதிகம். பக்கத்தில் எங்கேயும் டெலிஃபோன் இருக்கா?''

''இங்கென்றால் தபால் கந்தோரில் மாத்திரம் தான் இருக்கு. அப்படித் தானே யசவதி அக்கா?''

''ஓம் அப்படித்தான் நானும் நினைக்கிறன். ஏன் சிவப்பு முதலாளி வீட்டில்.....''

''அங்கு போக எனக்கு விருப்பமில்லை''

''இதில் 'இன் கமிங்'குக்குக் காசு வெட்டுவாங்களே''

டீச்சர் அக்கா என்ன சொன்னாவென்று கமலா யோசித்தாள். கீழ் வகுப்பில் ஆங்கிலம் கற்பித்த மிஸ் 'கம் இன்' என்றவுடன் வகுப்புக்கு வெளியே இருந்து உள்ளே செல்வது அவளுக்கு ஞாபகம். 'இன் கமிங்' என்றால் 'உள்ளே செல்லுங்கள்' என்பது தான் அதன் கருத்தாக இருக்க வேண்டும்.

அவள் மனதால் தீர்மானித்தாள்.

சாப்பிட்டு சிறிது நேரம் கழித்த பின்னர், வேனிலிருந்து டீச்சர் மாமியின் சாமான்களை இறக்குவதற்கு தயாசேனவும் தம்பியும் உதவி செய்ய நேர்ந்தது.

கட்டில், இரண்டு மடி கதிரைகள், மின்விசிறி, குசன் மெத்தை, சக்கரம் பொருத்திய பெரிய பேக், நிலைக் கண்ணாடி, மேசை என்பன அவற்றுள்

அடங்கும். அதற்கு மேலதிகமாக உடுபிடவைகளும் புத்தகங்களும் காணப்பட்டன. விறாந்தையில் வைக்கப்பட்டிருந்த அந்தப் பொருட்களால் வீட்டுக்கு புத்தழகு ஏற்படுவதாக தயாசேன நினைத்தான்.

சாமான்களை இறக்கும் போது அதனூடாகப் பரவிய நறுமணத்தால் மூக்குநுனி துடித்தது.

பணத்தைப் பெற்றுக் கொண்ட சாரதி வக்வலைப் பக்கமாக வாகனத்தில் ஏறிப் பறந்தான்.

தயாசேனவுக்கும் சுனிலுக்கும் செவ்வந்திக்கும் டீச்சர் மாமியிடமிருந்து கைநிறைய டொபி கிடைத்தது.

சகோதரர் இருவரும் நண்பர்களுக்கு அதைப் பகிர்ந்து பெருமையடிக்க வீட்டிலிருந்து வெளியேறிச் சென்றனர்.

டீச்சர் மாமி பிள்ளைகள் பற்றி கமலாவிடம் கேட்டறிந்தார்.

''அப்படியெல்லாம் முடியாத கமலா. பிள்ளைகளோடு கொஞ்சம் கண்டிப்பாக நடந்து கொள்ள வேணும். செல்லமாக வளர்க்கக் கூடாது'' என்று சொன்ன மாமி, ''பெரியவன் வகுப்பில் எத்தனையாம் பிள்ளை?'' என்று வினவினாள்.

''இருபத்தொன்பதாவது''

''மை கோட். அவ்வளவு கீழே போனால் எப்படி? சரி சின்னவன்....?''

''அவனும் அப்படித்தான். எனக்கு சரியாக ஞாபகமில்லை டீச்சரக்கா''

''டவுன் பிள்ளைகள் இப்படியா? ஓ லெவலில் பத்து ஏ, ஏ லெவலில் மூன்று ஏ''

''இதெல்லாம் பிள்ளைகளின் அப்பா வேலை நிறுத்தத்திற்கு அகப்பட்ட தால் தான். இது போதாதென்று இளைய தம்பி கல்யாணம் கட்டிக் கொண்டு அண்ணன் செய்த சேனையை வேறு பறித்துக் கொண்டான். அதனால் தானே கூலி வீடுகளில் இருக்க வேண்டி நேர்ந்தது''

''கமலா, எனக்கும் அமெரிக்காவிலுள்ள தம்பிக்கும் பங்கான காணியொன்றிருக்கு. அதை நாங்கள் விற்கப் போறோம். பார்ப்போமே..... எங்க குடும்பத்துக்குள்ளே கஷ்டமான ஒருவருக்கு கொடுத்து உதவி செய்யும் எண்ணம் எனக்குண்டு......ம் சரியான உஷ்ணம்''

''ஓம்..... புதுவருஷத்துக்கு இன்னும் அதிக நாளில்லயே''

''அந்தப் பேனைப் போடு கமலா''

கமலா மின் விசிறியை டீச்சர் அக்காவுக்கு அருகே வைத்தாள். அது 'ஹம்' சத்தத்துடன் சுழன்றது.

சிறிது நேரத்தில் டீச்சர் மாமி சாய்கதிரையில் குறட்டை ஒலி எழுப்பினாள்.

2



அடுத்த பௌர்ணமி தினம் முதல் அழகிய முறையில் புண்ணிய கரும மொன்றை நடாத்துவதென்று விகாரை பரிபாலன சபை முடிவெடுத்திருந் தது. முழுமையாக இரண்டு நாட்கள் நடைபெறும் இந்நிகழ்வு பற்றி கதைத் துக் கொள்ளாதவர்கள் அடுத்த கிராமத்தில் கூட இருப்பது சந்தேகமே.

அறநெறிப் பாடசாலையில் கல்வி கற்கும் தயாசேனவுக்கும் சுனிலுக்கும் இப்புண்ணிய கருமம் தொடர்பாக நிறைவேற்ற வேண்டிய நிறைய வேலை கள் இருந்தன. மின் விளக்கலங்காரம் செய்வதற்காக ஆற்றங்கரைக்குச் சென்று மூங்கில் வெட்டி வருவதும், கொடி கட்டி தருமசாலையை அழகூட்டுவதும அவர்களது பொறுப்பாகும்.

மாலையில் விகாரைப் படிகளில் ஏறிக் கொண்டிருந்த சுனிலும் தயா சேனவும் உச்சிப் படிக்கட்டில் அமர்ந்திருந்த அப்புமாமாவைக் கண்டனர்.

"இந்த முறை ஊர்வலத்தில் என்ன நிகழ்ச்சி செய்யப் போறீங்க அப்பு மாமா?"

"இன்னும் நான் அதைப் பற்றி ஒன்றும் யோசிக்கவில்லயே"- அப்புமாமா பதில் சொன்னார்.

''அப்பிடிச் சொல்ல முடியாது அப்புமாமா. ஏதாவதொரு கூத்துச் செய்யணும். ஊரில் எல்லோருமே எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறாங்க''

''அப்படியா சரி, நீங்களே தீர்மானியுங்கோ''

அப்புமாமாவின் முடி வெள்ளையோ வெள்ளை. பஞ்சுக் குவியல் போன்றது. வளர்ந்தவர்களென்றாலென்ன, சிறுவர்களென்றாலென்ன எல்லோருமே அவரை 'அப்புமாமா' வென்றே சொல்கின்றனர். அறநெறிப் பாடசாலைப் பிள்ளைகளோடும் இளைஞர் முதியவர்களோடும் ஒரே விதமாக பகிடி விட்டுச் சிரித்துக் கதைப்பார்.

அவரது வயது எழுபதுக்கு மேல். அதை சின்ன பிக்கு மூலமாகவே தயாசேன தெரிந்து கொண்டான்.

''அப்புமாமா இந்தமுறை காற்சட்டை கூத்து செய்வோமா?''

''ந.... ந..... நல்லது''

''அப்பு மாமா அந்தப் பாட்டைப் பாடுங்களேன்''

''டை டை கட்டை கட்டை டை.... வெற்றிலைபோல் கட்டை
டை டை நீள நீள டை..... வீதி போல நீளடை''

விகாரை தோட்டத்தில் சடுகுடு விளையாடிக் கொண்டிருந்த பிள்ளைகள் பாட்டுச் சத்தத்திற்கு ஓடோடி வந்தனர்.

''தன்ன தனா தன தன தன தனானா
இதோ இதோ காற்சட்டை கூத்து பாருங்கோ''

விகாரைக்கு முன்னாலுள்ள கறுப்பு மாமி வீட்டு ஜினபாலயும் வந்து சேர்ந்தான்.

''அப்பாமார்க்கு நீளக்கால்- அம்மாமார்க்கு கட்டைக்கால்
அப்பாமார்க்கு அம்மாமார்க்கு ஒவ்வொரு காற்சட்டை
சின்ன பேபிக்கு சிறு காற்சட்டை
பெரிய பேபிக்கு பெருங் காற்சட்டை
கூதல் அடிக்கும்
காதில் கடுக்கன்''

அப்புமாமா காலை வளைத்து வளைத்து விகாரை முற்றத்தில் கூத்தாடத் தொடங்கிவிட்டார். பிள்ளைகள் சுற்றி நின்று கைதட்டினர்.

பெரிய பிக்கு மேல் வாசஸ்தலத்திலிருந்து அமைதியாகக் கீழே இறங்கி வந்தார்.

"என்ன அப்பு.... ஊர்வலம் நேரகாலத்தோடு ஆரம்பித்துவிட்டதாக்கும்"

கழுத்திலிருந்த துவாயை கையிலெடுத்து அப்புமாமா பெரிய பிக்குவிற்கு இடம் விட்டு ஒதுங்கினான்.

"இல்லை பெரிய பிக்கு. கோட் அணிந்து டை கட்டி என்னை ஊர்வலத் தில் வருமாறு இந்தப் பிள்ளைகள் சொல்றாங்க"

பெரிய பிக்குவின் முகத்தில் மெல்லிய புன்னகை படர்ந்தது.

"அதுக்கென்ன? சந்தோஷம் தானே நோக்கம். மற்றது காற்சட்டைக் கோலத்தோடு ஊர்வலத்தில் போகையில் அப்படியான பொய் வேசக் காரருக்கும் ஒரு அடிதானே"

"உண்மை தான் எங்கள் பெரிய சுவாமி"

"பார்த்தீங்களா பெரிய பிக்குவும் அனுமதி தந்திட்டார். இருந்தாலும் என்னிடமெங்கே அப்படியான உடுப்புகள்?"

"அப்புமாமா நான் உங்களுக்கு காற்சட்டை கொண்டுவந்து தாரன்"

கறுப்பு மாமி வீட்டு ஜினபால முன் வந்தான்.

"எங்கள் அப்பப்பாவின் கோட் வீட்டிலிருக்கு. நான் அதைக் கொண்டு வாரன்"

இன்னொருவன் விருப்பம் தெரிவித்தான்.

"என்னால் டை கொண்டு வர முடியும்"

வல்பிட தோட்டத்து பிரனாந்து முதலாளியின் மகன் உறுதியளித்தான்.

"சரி இந்த யோசனையை தெரிவித்து ஆரம்பித்து வைத்த தயாசேன..... நீங்க என்ன கொண்டு வருவீங்க?"

தயாசேன கொஞ்ச நேரம் யோசித்தான்.

எதுவுமே ஞாபகத்திற்கு வரவில்லை. அவனுக்கு சற்றே வெட்கமும்

கூட. காற்சட்டை, கோட், டை எல்லாமே கொண்டுவர சம்மதம் தெரிவித்து விட்டார்கள். இனி சப்பாத்து மாத்திரமே பாக்கி. 'இருந்தும் என்னிடமெங்கே சப்பாத்து?' தயாசேன யோசித்தான்.

சுனில் அண்ணாவின் அருகில் வந்து, அவனது தலையைப் பதித்து, "டீச்சர் மாமியின் கறுப்புக் கண்ணாடியைக் கொண்டு வந்து கொடுப் போமா?"- என்று கேட்டான்.

"சரி நான் கண்ணாடிக் கூட்டமொன்று கொண்டு வாரன்"

"இப்போ எல்லாம் சரி. அப்பு மாமா உடுத்தியிருக்கும் சேர்ட் நல்லது தானே?"

இடையில் ஜினபால வாய் போட்டான்.

"அப்படியென்றால் சப்பாத்து?"

அது பிரனாந்து முதலாளியின் மகனின் கேள்வி.

"நாங்கள் பாக்கு மடலால் சப்பாத்துச் செய்வோம்"

சிறுவர்கள் ஒன்றாகக் கூறினர்.

கனேகொட சின்ன பிக்குவும் அப்பு மாமாவை நெருங்கி கதையில் கலந்து கொண்டார்.

"அப்புமாமா இளைஞர் போல் முடியைக் கறுப்பாக்கினால் தான் நல்லது"

டீச்சர் மாமி தனது முடியைக் கறுப்பாக்கும் சாயக்குப்பி தயாசேனவுக்கு ஞாபகம் வந்தது.

"சரி அதையும் நானே கொண்டு வாரன்"

எல்லோருக்கும் கஷ்டமான சாமான்களை தன்னால் கொண்டு வர முடிந்ததையிட்டு தயாசேன பெருமைப்பட்டுக் கொண்டான்.

இறங்கிச் செல்லும் சூரியக் கலைஞனின் அழகிய நிழல் தெளிவாக நிலத்தில் இன்னும் படராவிட்டாலும் வல்பிட தோட்டத்து தொழிற்சாலை வரை படர்ந்திருப்பதாக தயாசேன கருதினான்.



# 3

டீச்சர் மாமிக்கு இரவு வேளையில் தூக்கம் சற்றுக் குறைவு தான். விடிகாலை நான்கு மணிக்கெல்லாம் விழித்து விடுவார். எவ்வேளையில் கண் விழித்தாலும் உடனே ஆங்கிலக் கவிதையொன்றை பாட ஆரம்பித்து விடுவார்.

அவ்வேளையில் தாங்களும் விழித்து விட்டதைக் காட்டிக் கொள்ளாமல் கடும் தூக்கத்தில் ஆழ்ந்திருப்பது போல் தயாசேனவும் சுனிலும் நடிப்பார்கள்.

''ஹ......... ஹ.... எழும்புங்க எழும்புங்க''

அவர்கள் இருவரும் தூங்கும் அறையின் நிலைப் பிடவையை விலக்கி டீச்சர் மாமி அதிகாலையிலேயே சத்தமிட்டார்.

''ஏர்லிடு பேட் ஏர்லிடு ரயிஸ்.... நேர காலத்துடன் நித்திரைக்கு செல் லுங்கள் நேர காலத்துடன் எழுந்து விடுங்கள் என்று கேள்விப்படவில்லயா? தட்ஸ் த வே டுபீ ஹெல்தி வெல்தி என்ட் வயிஸ்''

'என்ன தொல்லையிது?' தயாசேன நினைத்தான்.

அவசர அவசரமாக எழுந்த கமலா சமையலறைக்கு தேநீர் ஊற்றச் சென்றாள்.

டீச்சர் மாமியுடன் முரண்பட்டுக் கொண்டு எழும்பும் சுனிலுக்கோ தயாசேனவுக்கோ தாம் விரும்பும் எதையும் செய்யச் சுதந்திரம் இருக்க வில்லை.

''ஆ.... ஆ... ஸ்பெலிங் பாடம் செய்யுங்கோ. இப்பிடியிருந்து படிக்க முடியாது பிள்ளைங்க''

''ஈ எல் ஈ பீ எச் ஏ என் ரி.... எலிஃபன்ட்..... யானை..... யானை...... எல் ஏ டீ வை..... லேடி''

வட்ஸ் த மீனிங் ஒஃப் லேடி?

டீச்சர் மாமி போய் வரும் போதெல்லாம் கேட்பார்.

''லே......டி...... லேடி''

தயாசேனாவால் அதன் கருத்தை நினைவுக்குக் கொண்டு வர இயலவில்லை.

''திரும்பத் திரும்ப அதை நன்றாகப் பாடம் செய்யணும். ம்..... என் னோடு விளையாட முடியாது தெரியுமா?''

டீச்சர் மாமிக்கு பால் தேநீர் தயாரித்துக் கொண்டு வந்த கமலா, பிள்ளை கள் இருவரையும் வெறும் தேநீர் குடிக்க உள்ளே அழைத்தாள்.

டீச்சர் மாமி வெளியே வருவதற்கு முன் ஒவ்வொரு நாளும் அதிகாலை யில் மத்தே அண்ணனுக்கு உதவிக்குச் செல்வான் தயாசேன.

பசு மாட்டுக்கு முன்பாக கன்றுக் குட்டியை தயாசேன பிடித்துக் கொண் டிருப்பான். கூடவே அதனுடலில் ஒட்டியிருக்கும் உண்ணிகளையும் அகற்றுவான். பால் கறந்து கொண்டிருக்கும் போதே தயாசேன அதன் தலையைத் தடவிவிடுவான். பாடசாலை சென்று வரும் போது மத்தெ அண் ணனின் மகனுடன் வயலுக்குச் சென்று புல் வெட்டிக் கொண்டு வருவான்.

பால் கறந்த பின் சுடச் சுட கால் போத்தல் பால் அவனுக்குக் கிடைக் கும். பாலுடன் வீட்டுக்கு வரும் தயாசேன பால் தேநீர் குடிக்க மிகவும் விரும்பினான்.

டீச்சர் மாமி படிப்பு வேலைகளுக்கு ஈர்த்துக் கொள்வதை அண்ணன்-தம்பி இருவருமே விரும்பவில்லை.

பாடசாலை விட்டு வரும் சுனிலும் தயாசேனவும் நண்பர்களுடன் கூடி தயாவதி மாமி வீட்டு மாமரத்திற்கு கல்லடிப்பார்கள்.

டீச்சர் மாமி தங்கியிருக்கும் அறை யன்னல், மாமரத்தடியில் நின்ற தயாசேனவுக்கு நன்றாகத் தெரிந்தது.

அறை யன்னலுக் கூடாக டீச்சர் மாமி பார்த்தபோது, நண்பர்களுடன் சேர்ந்து சுனிலும் தயாசேனவும் மாமரத்துக்கு கல்லடிப்பது தெரிந்தது.

''கமலா கொஞ்சம் இங்க வா. சுனிலும் தயாசேனவும் என்ன செய்றாங்க ளென்று பார். மாம் பிஞ்சுகளை வேறு தின்கிறாங்கள். இந்தக் கோடையில் அந்த அழுக்குகளைத் தின்று நோய் தேடிக் கொள்ளப் போறாங்க''

கமலா தூரத்தில் நிற்கும் பிள்ளைகளைப் பார்த்துச் சத்தமிட்டாள்.

''சுனில்..... தயாசேன..... இங்க நான் வரச் சொல்றன்''

அம்மாவின் குரல் கேட்டு தயாசேன பார்த்தான். கமலா கையசைத்து அழைத்த போது இருவரும் கோபத்துடனே வந்தார்கள்.

''அங்க டீச்சர் மாமி வரச் சொல்றா. நல்ல பேச்சு விழப்போகுது''

''பிள்ளையள்..... மாம்பிஞ்சு ஆய்ந்து ஒன்றும் நடக்கப் போறதில்ல. படியுங்க. உங்கட வேலகளால் என்ற பெயரும் கெட்டுப் போகும் போலிருக்கு''

வீட்டுக்கு வந்த இருவரும் புத்தகங்களை எடுத்து வாசிக்க ஆரம்பித்த போதும் அவர்களுக்கு அதில் நாட்டமிருக்கவில்லை.

'நிறைவான சௌபாக்யம் நமக்கருளும் பெருமகனார்
உயிரினங்கள் முகம்கொடுக்கும் இன்னல்கள் தீர்த்திடுவார்
கடுமிருளைப் போக்கியொளி பாய்ச்சுகின்ற சூரியனார்
திடமுடனே மகிழ்ந்தவரை தினம்தினமும் வணங்கிடுவோம்'

சுனிலின் குரலைக் கேட்டபடி குசினிப் பக்கம் சென்ற டீச்சர் மாமி ''அங்க பார் கமலா பிள்ளைகள் எவ்வளவு அழகாகப் படிக்கிறாங்க'' என்றாள்.

''ஐயோ எனக்கென்றால் தெரியாதக்கா''

''தெரியாதென்று சொல்லிவிட முடியாது. அந்தந்த வேலையை அப்படியப்படிச் செய்ய வேணும். பிள்ளைகள் நினைத்தபடி செய்ய இடங் கொடுத்தால் பிறகு படிக்க மாட்டாங்கள்''

கமலா சமையலறையில் பலாப்பிஞ்சு தயார்படுத்தினாள்.

அம்மா மிகக் கவனத்தோடு வேலை செய்து கொண்டிருப்பதை தயா சேன பார்த்துக் கொண்டிருந்தான்.

''அம்மா?''

''என்ன?''

''அம்மா சிவப்பு முதலாளி வீட்டில் பேயோட்டிறாங்களாம்''

''இனி''

''பார்க்கப் போகணும் அம்மா''

''ம்... எனக்குத் தெரியாது. நடு ராத்திரியில போகவரத் தொடங்கினால்...''

''மற்ற நாளில் போறநாங்கதானே''

''டீச்சர் மாமி எனக்கும் சேர்த்துப் பேசுவா..... பிள்ளைகள பழுதாக்கிற தென்று''

''டீச்சர் மாமிக்கு சொல்லாமல் போறம்''

''எனக்குத் தெரியாது''

மாலை ஐந்தரையாகும் போது புத்த பூஜைக்காக தயாசேனவும் சுனிலும் பூக்கொய்து கொண்டு வரவேண்டும். பூஜை வேளையில் அவர்களுக்குத் தெரியாத எவ்வளவோ பக்தி கீதங்களை டீச்சர் மாமி பாடுவார்.

பௌர்ணமி போயா நாட்களில் விகாரையில் பிக்குமார் சொல்லும் பாடல்களை அதே ராகத்தோடு அவர்கள் சொல்வார்கள். அதே வேளை இரவு நேரத்தில் டீச்சர் மாமி பாடும் பக்திகீதங்களையும் சுனிலும் தயாசேனவும் பாட வேண்டுமென்பது புதிய விதி.

டீச்சர் மாமி ஓய்வூதியம் பெறுவதற்கு போத்தலை தபாற் கந்தோருக்குச் சென்றவேளை, பலகொட சந்திக் கடையில் விலை கொடுத்து இந்த புத்தர் சிலையை வாங்கி வந்திருந்தார்.

அன்று முதல் மாலை ஆறரை ஏழு மணியாகும் போது புத்தர் சிலைக்கு மலர் அர்ச்சனை செய்வார்.

''பூஜேமி புத்தங் குசுமேன....''

அக்கம் பக்க வீடுகளுக்கும் கேட்கக் கூடியதாக டீச்சர் மாமி பக்திப் பாடல்களை சத்தமிட்டுச் சொல்வார்.

பூஜை முடிவில் ''இனிப் போய் அம்மாவை வணங்குங்கள். அம்மாதான் இரண்டாவது தெய்வம்'' டீச்சர் மாமி சொல்வார்.

அவர் தயாசேனவின் வீட்டுக்கு வரமுன்பே அவர்கள் இருவரும் அம்மா-அப்பாவை வணங்கத் தவறவில்லை.

மீண்டும் சமையலறைக்குச் சென்ற தயாசேன பேயோட்டுதல் பார்க்கப் போவது பற்றி முணுமுணுக்கத் தொடங்கினான்.

''எனக்கிங்க....''

''மாமி தூங்கிய பின் போறனம்மா......''

''எனக்குத் தெரியாது''

வெளிப்பக்கமாக நின்று சுனில் இந்தக் கதைக்கு காது கொடுத்துக் கொண்டிருந்தான்.

''அம்மா அண்ணன் பேயோட்டடல் பாக்கிறதுக்கல்ல போறான். சிவப்பு முதலாளி வீட்டில் கேக், பிஸ்கட், வாழைப்பழமெல்லாம் தாராளமாக இருக் கும். அதுக்கு ஆசைப்பட்டுத்தான்.....''

''தம்பி வேண்டிக் கொள்ளப் போகிறாய் நீ''

கையை உயர்த்திக் கொண்டு தயாசேன கோபத்தோடு வெளியே பாய்ந்தான்.

''ம் அடிக்கிறதில்ல''

அம்மா குறுக்கிட்டு மோதலை தவிர்த்தாள்.

வாசலில் தங்கை அழுவதைக் கேட்டு அம்மா அந்தப் பக்கமாகச் சென்றாள்.

"தம்பி இரவைக்கு நாங்கள் பேயோட்டும் வீட்டுக்குப் போவோம்"

"டீச்சர் மாமி பேசுவா"

"மாமிக்குச் சொல்லாமல் போவம்"

"அதெப்படி?"

"மாமி தூங்கிய பின்பு"

சாப்பிட்ட பின் எல்லோரும் நித்திரைக்குச் சென்றனர். மாமி அடுத்த அறையில் குறட்டை விடுவது கேட்டது. சுவர் மணிக்கூடு பத்துமுறை ஒலித்தது.

"தம்பி..... தம்பி எழும்பு..... பேயோட்டல் பார்க்கப் போறதில்லயா?"

சுனில் சோம்பல் முறித்துக் கொட்டாவி விட்டபடி சிரமத்தோடு எழுந்திருந்தான்.

"எப்படி போறது?"

தாழ்ந்த குரலில் சுனில் கேட்டான்.

"இரண்டு பாய் எடு..... இரண்டு தலையணையும் எடு. அங்க அந்த மூலையில் இருக்கு"

பாய், தலையணைகளை வைத்து அதைப் பிடவையால் போர்த்தி இருவரதும் உருவம் போல் செய்தனர். பின்னர் தங்களது படைப்பாற்றலைப் பார்த்து பெருமிதமடைந்தனர்.

"சரி போவம்"

"அம்மா..... அம்மா"- என்று சுனில் கைகளால் அசைத்துப் பேசினான்.

"என்ன என்ன?"

"அம்மா நாங்கள் பேயோட்டம் பார்க்கப் போறம்"

''கவனம்..... விடிய முதல் வந்து விடுங்கள்''

தடவி தடவி சமையலறை மேற்கட்டிலிருந்து தீப்பெட்டியைத் தேடி யெடுத்தான் தயாசேன. ஏற்கனவே தயார் பண்ணி வைத்திருந்த சிரட்டை மெழுகுவர்த்தியோடு வெளிப்பட்டனர். தீக்குச்சிதை் தட்டி அதனை ஒளியேற்றிக் கொண்டு பின்கதவை அடைத்துவிட்டு புறப்பட்டனர்.

தயாசேனவும் அவன் பின்னால் சுனிலுமாக வெட்டு வாய்க்கால் வரம்பினூடாக நடந்தனர். கொஞ்சத் தூரம் சென்றபின் இடப்பக்கம் திரும்பி சின்னப் பாலத்திற்கேறினர்.

அரை நிலவு இறப்பர் மர உச்சியை தொட்டுக் கொண்டு நின்றது. மேகக் கூட்டம் விரையும் வானிலே அவ்வப்போது வௌவால்கள் சிறகடிப்பது தெளிவாகத் தெரிந்தது.

வெட்டு வாய்க்கால் நீர்பரப்பின் மீது நிலவொளி விழுந்து சலனித்தது. வாய்க்காலுக் கூடாக குளிர்ச்சியான காற்று மிதந்து வந்தது.

''தும் தும் தும்,......
தும் தும் தும்...''

சிவப்பு முதலாளி வீட்டுப் பக்கமிருந்து பரவும் பேய் மேள ஒலி மனதை மட்டுமல்ல உடலையும் புல்லரிக்கச் செய்தது.

''யாரெல்லாம் வந்திருக்காங்களோ தெரியாது''

சுனில் அண்ணனிடம் கேட்டான்.

''ஜினபால இருப்பார். பிரனாந்து முதலாளியின் மகன் வந்திருப்பான்''

''ஏன் அப்பு மாமா?''

''ஓம்''

தயாசேன அதனை ஏற்றுக் கொண்டான்.

''தங்குதியவும் இருப்பான்''

வாய் நுனிச் சிரிப்போடு சுனில் சொன்னான்.

''தங்குதிய பிரித், தானவீடு, பேயோட்டுமிடங்களைத் தவறவிடுவதில்லயே''

''இன்னுமொருவர் வருவார்''

''யாரது?''

''வந்து வந்து....... தயாசேன என்று''

''கன்னத்தில் அடி விழும் பகிடிக்கு வந்தால்''

பின்னே பாய்ந்த சுனில் அண்ணனின் தாக்குதலில் இருந்து தப்பிக் கொண்டான். மேளச் சத்தம் நெருங்க நெருங்க இருவரதும் நடை வேகம் பெற்றது.

சிவப்பு முதலாளியின் மனைவி தேநீர் பருகுவதற்காக சகலரையும் அழைத்து நின்றாள்.

''ஆ...... போவோம் தம்பி. இங்கு வேலையும் சுனங்குமல்லோ...... தேநீர் தயாராம்''

''தயாசேன...... தம்பியையும் கூட்டிச் சென்று தேநீர் குடியுங்கோ''

இருவரும் வீட்டினுள்ளே சென்றனர். தேநீர் ஏற்பாடு செய்திருந்த அறைப் பரபரப்பாகவிருந்தது.

''சரி சாப்பிடுவோம்....'' மத்தே அண்ணன் சொன்னார்.

தயாசேன தேங்காய் கேக் துண்டுடன் வாழைப்பழமும் இடுங்கிக் கொண்டான்.

''நல்ல அண்ணன். தம்பிக்குக் கொடுக்காமல் சாப்பிடுறான்''

ஜினபால பகிடி பண்ணினான்.

''மெல்ல மெல்ல சாப்பிடு தயாசேன. பற்கள் கழன்றுவிடும்''

மெத்தே அண்ணன் தான் அப்படிச் சொன்னார்.

தடித்த பிடவை நான்கு மூலைகளும் கயிற்றால் கட்டப்படடு நான்கு பக்கமாக இழுத்துக் கட்டப்பட்டிருந்தது. அந்தப் பிடவை கீழ்நோக்கிப் பதிவதைத் தடுப்பதற்காக மூங்கில் தண்டினால் உயர்த்தப்பட்டிருந்தது. நுனியால் பிடவை கிழிந்து விடாமல் இருப்பதற்கு சிரட்டையொன்று

கவிழ்க்கப்பட்டிருந்தது. பேயோட்டல் பார்க்க வந்திருந்தவர்கள் இதன் கீழ் அமர்ந்து கதைத்துக் கொண்டிருப்பதை தயாசேன அவதானித்தான்.

முற்றத்தில் இதற்கு எதிர்ப்பக்கத்தில் அமைக்கப்பட்டிருந்த தகரக் கொட்டிலில் நோயாளி அமர்ந்திருந்தார்.

மந்திரவாதி ஒரு கையில் ஈட்டியும் மறுகையில் கமுகம்பூக் கொத்தையும் வைத்திருந்தார். அவர் அடிக்கடி இரு கைகளாலும் அரைவட்டம் வரையப் போவது போல் வளைந்து "ஆவடா ஆயுள் பெருகட்டும்" என்று ஆசீர்வாதம் செய்தார்.

வாலிபர் கூட்டமும் "பெருகட்டும்" என்று ஒன்றாகச் சத்தமிட்டனர்.

நட்டுவக்காரனதும் மேளக்காரனதும் உரையாடல் பேயோட்டல் பார்க்க வந்திருந்தவர்களுக்கு நல்ல விநோதமாக அமைந்தது.

அடுத்ததாக.......

அங்குமிங்குமாக வளைந்த பற்களுடன் கூடிய அகோரத் தோற்றத்துடன் இலைக்கொப்புகளை இடையில் சொருகியபடி வந்து பாய்ந்தது ஒரு பேய்.

அது வரும்போது இவ்வாறு சத்தமிட்டது.

"இதென்ன தொல்லையப்பா"

"கூடாது. புத்த பெருமானுக்கு பூஜை செய்த பெரும் பூமியில் நின்று கொண்டு இப்படிச் சொல்லக் கூடாது"

மேளக்காரன் கேட்டான்.

"என்ன சொன்னீங்கள்?"

விதவிதமான பகிடிக் கதைகள் அங்கே தொடர்ச்சியாக இடம்பெற்றன.

மேளச் சத்தம் காரணமாக டீச்சர் மாமிக்கு நித்திரையே வரவில்லை. ஒருமுறை அடுத்த அறையை எட்டிப் பார்த்தபோது அங்கே அமைக்கப்பட்டிருந்த உருவங்களைப் பார்த்து தயாசேனவும் சுனிலும் தூங்குவதாகவே எண்ணிக் கொண்டார்.

அதிகாலை ஐந்து மணிக்கு இருவரும் வீட்டுக்கு வந்தனர். தயாசேன சமையலறைக் கதவில் நகத்தால் தட்டினான்.

அம்மா வந்து சத்தமெழாமல் கதவைத் திறந்த போது எதுவும் தெரியா ததுபோல் இருவரும் அறையுள் புகுந்து தூங்கிவிட்டனர்.

டீச்சர் மாமி காலை ஏழு மணி கழிந்த பின்னரே கண் விழித்தார்.

"ஆ தயாசேன எழும்பு.... எழும்பு.... இரண்டு பேரும் எழும்புங்க..... ஆ...... ஆ"

தயாசேனவும் சுனிலும் சற்று தயக்கம் காட்டினர். தூங்குமளவுக்கு அவர்களுக்கு நேரம் கிடைக்கவில்லை தான்.

"மேளச் சத்தத்தால் நான் கண்மூடவே இல்லை"

பிள்ளைகள் இருவரையும் பாடசாலைக்கு அனுப்பாமல் விடத் தீர் மானித்திருந்த கமலா, "அக்கா இவர்களை அனுப்பாமலிருக்க யோசித் தன். கொஞ்சம் உடம்பும் சூடாக இருக்கு" என்றாள்.

"என்ன விசரா கமலா, அந்தக் கதை மாத்திரம் சொல்ல வேண்டாம். அங்கே என்னிடமிருக்கு காய்ச்சலுக்குக் கொடுக்கும் டெப்லட்ஸ். அதில் ஆளுக்கு இரண்டு கொடுத்து அனுப்பிவிடு"

"தயாசேன எழும்பு..... சுனில்...... டீச்சர் மாமி குழிகை ஏதோ தருவா அதை விழுங்கிவிட்டு பள்ளிக்கூடம் போக வேண்டியதுதான்"

## 4



"போயா நாட்களில் வேலைத்தளங்களில் வேலை செய்யமாட் டார்களே."

அம்மாவுக்குக் கேட்கும்படியாக அப்பா சொன்னார்.

"வந்தது நல்லாப் போயிற்று"

"சின்ன பிக்கு என்ற முகவரிய எப்படித் தெரிந்து கொண்டாரோ தெரியல்ல"

"ஏன் சின்னபிக்குவின் நெருங்கிய நண்பரொருவர் எங்க வீட்டிலிருக்காரே"

"நான் புண்ணிய நிகழ்வுக்கு எங்கட வேலைத் தளத்திலிருந்து அறுநூற் றைம்பது ரூபா சேர்த்தனுப்பினன்"

"ம்.... அப்படியென்றால் அவங்களுடைய விடயங்களுக்கு நீங்களும் கொடுக்க வேண்டிவரும்"

"இந்த முறை ஊர்வலத்துக்கு மூன்று யானை கொண்டுவாராங்களாம் அப்பா"

பேச்சுக்கு சுனில் சேர்ந்து கொண்டான்.

"எங்கிருந்து யானை?"

''நாக்கிதெனிய தோட்டத்திலிருந்து கந்தவிட்டு ராலஹாமி அங்கு வேலைத்தலம் வைத்திருக்கிறாராம்''

தயாசேன சொன்னான்.

"ம் அண்ணனுக்கு என்ன தெரியும்! ராலஹாமி கள்ளத்தனமாக மரம் வெட்டுறாராம் என்று சின்ன பிக்கு சொன்னார்''

சுனில் இடையில் வாய்போட்டான்.

''இரண்டு பேரும் சரி''

இருவரையும் சமாதானப்படுத்துவதற்காக அப்பா இப்படிச் சொன்னார்.

டீச்சர் மாமி பெரிய ஆலமரத்துறையில் குளித்து விட்டு இப்போது தான் வீட்டுக்கு வந்தார்.

''சொல்லுங்கொ டீச்சர் அக்கா''

''எந்நேரம் வந்தீங்க சிறிஸேன?''

''வந்து இப்போது தான் தேநீர் குடித்தன். எப்படி இந்தப் பக்கம்?''

''பிழையில்லை''

''அக்கா நீங்கள் வந்தது இந்தப் பிள்ளைகளுக்கு எவ்வளவோ நல்லது. எனக்கும் அடிக்கடி வந்து போய்க் கொண்டிருக்க முடியாது. ஆ..... பெரிய வன் மத்தெ அண்ணன் வீட்டுக்குப் போய் தயிர்ச் சட்டியொன்று கொண்டு வந்தால் நல்லது''

''சிறிஸேன எனக்கு கோலொன்றெடுக்க அருகில் எங்காவது இட மிருக்கா?''

''ஆ சிவப்பு முதலாளியின் வீட்டிலிருக்கு. ஆனா போக ஒரு மாதிரி யாயிருக்கு''

''ஏன் தபால் கந்தோரில் இருக்கே அப்பா''

தயாசேன ஞாகமூட்டினான்.

''கொஞ்சம் கேளுங்க.... மந்திரியின் வீட்டிலெடுத்தால் காசு போகாதே''

அது கமலாவின் குரல்.

''யாருக்கு அக்கா?''

சிறிஸேன விசாரித்தான்.

''அமெரிக்காவிலிருக்கிற தம்பிக்கு''

''பயணம் தான் தூரம்''

சிறிஸேன பச்சாதாபப்பட்டான்.

''சமன் தம்பியின் ஹொன்டாவை ஒருக்கா கேட்டுக் கொள்ளுங்கொ''- கமலா சொன்னாள்.

''டீச்சர் அக்கா தயாராகுங்கோ. நான் பைக்கைக் கேட்டுக் கொண்டு வாரன்''

மாமியும் அப்பாவும் மந்திரியின் வீட்டுக்குச் சென்றார்கள்.

''பெரியவன்..... நான் இந்தப் பிடவைகளைத் தோய்த்து தங்கையை குளிப்பாட்டிக் கொண்டு வாரன். எங்கயும் போக வேணாம். டீச்சர் மாமியின் சாமான்களைத் தொடவும் வேணாம்.''

அம்மா தங்கையோடு ஆற்றுத்துறைக்குச் சென்றாள்.

''அண்ணா...... டீச்சர்மாமியின் செல்டெல்லோ ஏதோ இருக்கே...... அதைப் பார்ப்பம்''

கபேட் கதவைத் திறந்த தயாசேன அதனுள்ளே செல்டெல் உண்டா என்று தேடினான். அவன் அந்த ஸெலியூலர் தொலைபேசியை எடுத்து காதருகே வைத்தான்.

''ஹலோ ஹலோ யார் பேசிறீங்க?''

''அப்படியல்ல அண்ணா. டீச்சர் மாமி பேசும் முறையை நான் அவ தானித்தன்''

அண்ணனிடமிருந்து அதனைப் பெறுவதற்கு சுனில் முயன்றான்.

''இங்க தா நானும் பார்த்துக் கொண்டிருந்தன்''

தயாசேன கண்டபடி பொத்தான்களை அழுத்தத் தொடங்கினான். பின்னர் காதில் வைத்துக் கொண்ட போது "பீச்..... பீச்...." சத்தமொன்று வெளிப்படத் தொடங்கியது.

"நீங்கள் அழைத்த இலக்கம் தவறானது"

அந்தக் குரலைக் கேட்டதும் தயாசேன திடுக்கிட்டான். அவனைப் பயம் கௌவிக் கொண்டது.

"அண்ணா அப்புமாமாவுக்கு கண்ணாடிக் கூட்டம் கொண்டுவந்து தருவதாகச் சொல்லியிருக்கிறோமல்லவா? ஊர்வலத்துக்கு"

"டீச்சர் மாமி கறுப்புக் கண்ணாடியை போட்டுக் கொண்டு போய் விட்டா என்ன?"

"இது இருக்கு மாமியின் கொண்டை கறுப்பாக்கும் டை"

சுனில் குப்பியைக் காட்டியபடி சொன்னான்.

"அதை எடுப்போம்"

தயாசேன கவனமாக அங்குமிங்கும் பார்த்தபடி சொன்னான்.

"எடுத்தால் தெரியவரும்"

அது சுனிலின் கருத்து.

"எப்படித் தெரியவரும்? மாமி ஒவ்வொரு நாளும் டை பூசுவதில்லயே. அப்பு மாமாவுக்கு கொடுத்துவிட்டு திரும்பவும் கொண்டு வந்து வைப்போம்"

தயாசேன கறுப்புச் சாயக் குப்பியைக் கொண்டுவந்து தனது புத்கப் பெட்டிக்குள் மறைத்தான்.

"எங்களுக்கு பாவம் கிடைக்குமோ தெரியாது"

சுனில் சந்தேகம் நிரம்பியவனாக அண்ணனிடம் கேட்டான்.

"இல்லை தம்பி. நல்ல விடயங்களுக்கு ஏதாவது எடுப்பது பாவமில்லை. அந்த தந்தத்தைக் கூட கள்ளத்தனமாக எடுத்தல்லவா இலங்கைக்கு கொண்டு வந்துள்ளார்கள்"

''அது தன்த குமாரனும் ஹேம்மாலி குமாரியுமல்லவா?''

''ம்''

டீச்சர் மாமி மனதில் மகிழ்ச்சியோடு வீட்டுக்கு வரவில்லை. களைப்புக்கு கட்டிலிலே சாய்ந்திவிட்ட அவர் எதுவும் பேசவில்லை.

''நாளைக்கல்லவா ஊர்வலம்?''

அப்பா தயாசேனவிடம் கேட்டார்.

''ஓம்''

விகாரையிலிருந்து பலகொட சந்தியைத் தாண்டி, எட்டாம் கட்டை பாதையால் வரும் ஊர்வலம், மஸ்ஸலைக்குச் சென்று மீண்டும் ஆற்றுக் கரைப் பாதையால் விகாரைக்கு வரத் திட்டமிடப்பட்டுள்ளது.

அப்பகுதி முக்கியஸ்தர்கள் கோணபுர வரை ஊர்வலம் செல்லவேண்டு மென்று கேட்டுக் கொண்டாலும், பயணத்தூரம் அதிகமாகுமென்று தர்மகர்த்தாக்கள் தெரிவித்தனர். அதை அவர்கள் ஏற்கவில்லை. பெரிய பிக்கு சம்பந்தப்பட்டு நியாயப்படுத்தி இணங்க வைத்தார்.

''மூத்தவனும் சின்னவனும் ஊர்வலத்தில் நிகழ்ச்சியொன்றுக்கு போறாங்கள்''

அப்பாவுக்கு கேட்கும் விதமாக அம்மா சொன்னாள்.

''எந்த நிகழ்ச்சிக்கு போறீங்கள்?''

''நாங்கள் சொல்லமாட்டோம். நாளை பார்த்துக் கொள்ள முடியும்''

''இனி சொன்னால் என்ன?''

அப்பாவின் குரலில் அன்பு கலந்திருந்தது.

''மத்தே அண்ணன் சொல்ல வேண்டாமென்றார்''

''வானொலியிலும் ஊர்வலத்தைப் பற்றிச் சொன்னார்களாம்''

தயாசேன அப்பாவிடம் சொன்னான்.

''டீச்சர் மாமி தான் ரேடியோவுக்கு தகவல் கொடுத்ததாகச் சொல்றாங்க''

அப்பா மூத்த மகனிடம் கேட்டார்.

''டீச்சர் அக்காவின் நெருங்கிய உறவினரொருவர் அங்க பெரிய ஆளா இருக்கிறாராம்''

கமலா கருத்துத் தெரிவித்தாள்.

ஒலிபெருக்கு பொருத்திய எல்ஃப் லொறியொன்று பாலத்தோடு ஒட்டியும் ஒட்டாமலும் வந்து நின்றது.

பழைய பாடலொன்று ஒலிக்கத் தொடங்கியது.

சற்று நேரத்தில் பாடல் சட்டென்று நின்றது.

''வணக்கம் சகோதரர்களே சகோதரிகளே''

அது கிராமத்திலே எல்லோருக்கும் பழக்கப்பட்ட குரல். விகாரையில் புண்ணிய கருமங்களின் போதும், கிடைக்கும் உதவி தொடர்பாக கவிதை பாடுவதற்கும், பூத்தட்டு ஏல விற்பனைக்கும், வருகை தரும் எத்கதுரை கவிஞர் சோமசிரியின் குரல் தான்.

அந்த அறிவித்தலில் அன்று பின்நேரம் இடம் பெறும். ஊர்வலம் தொடர்பான விபரம் சொல்லப்பட்டது. அறிவித்தலைத் தொடர்ந்து பறந்து சென்ற லொறியின் பின்னால் கொஞ்சதூரம் ஓடிய சிறுவர் கூட்டம் களைத்துப் போய் நின்றுவிட்டனர்.

''தம்பி டீச்சர் மாமி எங்க?''

''குளிக்கப் போயிருக்கா''

அங்குமிங்கும் பார்த்த தயாசேன டீச்சர் மாமியின் அறைக்குள் புகுந்தான்.

கறுப்புக் கண்ணாடி மேசையின் ஒரு பக்கத்திலிருந்தது. அவன் அதைக் கையிலெடுத்தபோது இதயம் 'படக் படக்'கென்று அடித்தது. யாராவது வருகிறார்களா என்று கண்காணித்தபடி சுனில் வாசலில் நின்றான்.

கருவாட்டு அவியல் அடுப்பிலிருக்கும் போது, பூசணிக் கறியுடன் இரண்டொரு வாய் சோறு சாப்பிட்ட தயாசேனவும் சுனிலும் விகாரைக்குச் செல்ல ஆயத்தமானார்கள்.

அவர்கள் சென்ற பிறகு டீச்சர் மாமி ஆற்றில் குளித்து விட்டு வந்தார்.

''டீச்சர் அக்கா, ஊர்வலம் பார்க்கப் போவோம்''

இது சிறிஸேனவின் ஆலோசனை.

அவள் எதுவும் கூறவில்லை.

''இரண்டோ என்னவோ யானை கொண்டு வராரங்களாம் அக்கா''

''நான் வந்து கண்டி, களனி, கலாசார ஊர்வலமெல்லாம் பார்த்திருக் கேன் கமலா. அதிலெல்லாம் என்ன மாதிரி யானைகள் போகும்''

''இருந்தாலும் டீச்சர் மாமியும் போறதென்னா பிள்ளைகள் இருவரும் சந்தோஷப்படுவாங்கள். மற்றது அவங்க ஏதோ நிகழ்ச்சிக்குப் போறாங்க. பாருங்க இதுவரை என்ன நிகழ்ச்சியென்று கூடச் சொல்லவில்லை''

கமலா டீச்சர் அக்காவுக்கு தெளிவுபடுத்தினாள்.

''அப்படியா? சரி போவம்''

உண்மையான விருப்பத்தோடு டீச்சர் மாமி சொல்லவில்லை.

அமெரிக்காவிலுள்ள தம்பியுடன் தொலைபேசியில் கதைத்த பிறகு, டீச்சரக்கா கொஞ்சம் அமைதியற்ற நிலையில் காணப்படுவதாக கமலாவுக் குத் தெரிந்தது. எவ்வாறாயினும் அதுபற்றி விசாரிக்க அவளும் தயங்கி னாள். தயக்கம் மட்டுமல்ல பயமும் கூடத்தான்.

முடியை டை பண்ணுவதற்கு தயாரான டீச்சர் மாமி குப்பியைத் தேடிய போதும் அது கிடைக்கவில்லை. யன்னலருகே கண்ணாடியைக் கொண்டு சென்று நடுவால் வகிடெடுத்துப் பிரித்த போது அடிப்பாகம் சற்று வெள்ளை யாகத் தெரிந்தபோதும், தூரத்திலிருந்து பார்ப்பவர்களுக்கு தெரியா தென்பது அவளுக்கு நிச்சயம். இருந்தும் டை குப்பிக்கு என்ன நடந்த தென்று அவரால் நினைத்துப் பார்க்க இயலவில்லை.

''டீச்சரக்கா போவோமென்ன''

காற்சட்டை அணிந்து கொண்ட சிறிஸேன கேட்டார்.

டீச்சர் அக்கா மேசை மீது எதையோ தேடுவது சிறிஸேனவுக்கு விளங்கியது.

"என்னக்கா தேடுறீங்கள்?"

"இல்ல..... இந்த என்ற கண்ணாடி"

"மந்திரியார் வீட்டுக்கு போட்டுக் கொண்டல்லவா போனீங்கள்?"

"ஓம்"

"அங்க மறந்து போய் வந்திட்டீங்களா?"

"ஆ..... இல்லை..... எனது ஞாபகப்படி எடுத்து வைத்தேன்"

"சரி..... வந்து தேடுவோம்"

டீச்சர் மாமி மகிழ்ச்சியின்றியே வெளியே வந்தார். மகளைத் தூக்கியபடி கமலா வந்தாள்.

ஊர்வலத்தில் பலவித விளையாட்டுக்கள் இடம்பெற்றன. சுளகு நடனம், பேய் நடனம், களிகம்பு, புலி நடனம், சிங்க நடனம் இப்படி எல்லோரது உள்ளத்தையும் ஈர்க்கும் விதமாக அமைந்திருந்தன.

சுனில் பொய்க் கொண்டை போட்டு கவுன் அணிந்து ஒரு யுவதி போல் அலங்கரித்து நின்றான். ஒன்றுக்கு மேலொன்றாக பல சாரன்கள் உடுத் தியிருந்த மெத்த அண்ணன் ஒரு கையிலே சுரைக்காய் பாத்திரமும் மறு கையில் தடியுமாக நின்றான்.

சாக்கைச் சுற்றிக் கட்டி அதன் மேல் பழம்பிடவை திணித்த கால் யானைக்கால் போல் தெரிந்தது. கருவாட்டுத் துண்டொன்றும் சுற்றப்பட்டி ருந்ததால் ஈக்கள் மொய்த்திருந்தன. பிள்ளைகள் இருவரை சேவகம் செய்ய அடிகொடுத்து அழைத்துச் செல்வதைப் பார்த்து வயதாளிப் பெண் கள் கன்னத்தில் கையூன்றியபடி கவலை தோய்ந்த முகத்துடன் காணப் பட்டனர். சுனிலும் தயாசேனவும் அழுவதற்கும் சத்தமிடவும் நின்றனர்.

கமலா மகளை மேலே உயர்த்தி "அங்க பார் அண்ணன்மார்" என்றாள்.

"சின்னண்ணன் அக்காவாகியிருக்கிறான். இனி வீட்டில் அவனை அக்கண்ணன் என்றுதான் சொல்வன்"

அப்புமாமா ஊர்வலத்தின் பிறபகுதியிலேயே காணப்பட்டார். கழுத்தில்

தூக்கியுள்ள அட்டை அவரது மார்புக்கு மேலிருந்தது. வெள்ளை அட்டையில் பெரிய கறுப்பெழுத்தில் 'காற்சட்டைக் கோலம்' என்று எழுதப்பட்டிருந்தது.

ஊரில் எல்லோரும் அறிந்து தெரிந்த அப்புமாமாவின் கூத்தைக் கண்டு கிராமத்துப் பெண்கள் வாயை மூடிக் கொண்டு சிரித்தனர்.

அவரருகால் பேய் மேளம் அடித்துச் சென்ற இளைஞர்கள். கைதட்டிப் பாடத் தொடங்கினர்.

"டை டை கட்டை கட்டை டை
வெற்றிலைபோல் கட்டை
டை டை நீள நீள டை
பாதை நீள டை"

அப்புமாமா அணிந்து கொண்டு சென்றது தன்னுடைய கறுப்புக் கண்ணாடியென்பது டீச்சர் மாமிக்கு விளங்கிவிட்டது.

'சரி சரி அப்பாவிடம் சொல்லி நல்ல பரிசு வாங்கித் தாரன்..... அண்ணனுக்கும் தம்பிக்கும்'

டீச்சர் மாமி தனக்குள் சொல்லிக் கொண்டார். அவருடைய தாடைகள் இறுகின. கடுங்கோபம் அவருக்குள்ளிருந்து வெளிப்பட்டது.

இதற்கு முன்பு தங்கியிருந்த வீட்டுப் பிள்ளைகள் தனது பணத்தை திருடிய விதம் அவளுக்கு ஞாபகம் வந்தது. தனது சொத்துக்களை எழுதிக் கொண்ட அண்ணன், தம்பிமார் தன்னை விட்டுவிட்டு வெளிநாடுகளுக்குச் சென்று அவர்களது மனைவி பிள்ளைகளோடு சந்தோஷம் அனுபவிப்பதை அவள் நினைத்துப் பார்த்தாள்.

நெஞ்சில் மெல்லிய வலியோடும் தலையிடியோடும் தவித்த டீச்சர் மாமி "போவோம் கமலா" என்று மனவெறுப்போடு சொன்னாள்.

# 5



**ஊ**ர்வலம் நிறைவுற்று தயாசேனவும் சுனிலும் முதலில் மத்தெ அண்ணனின் வீட்டுக்கு வந்தார்கள். அங்கிருந்து பெற்றுக் கொண்ட ஓலைப் பந்த ஒளியில் வீடு வந்து சேரும் போது இரவு எட்டு மணியாகி விட்டது.

தண்ணீர் தாகமும் களைப்பும் கடுமையாகத் தாக்கியிருந்ததை இருவர் முகங்களும் பிரதிபலித்தன.

''கடும் பசியம்மா''

தயாசேன வீட்டுக்குள் புகும்போதே சொன்னான். சுனில் நேராக சமை யலறைக்குச் சென்று ஒரு கோப்பைத் தண்ணீர் வார்த்து அப்படியே குடித்தான்.

''தேநீர், குளிர்பானங்கள் இரண்டு மூன்று இடங்களில் கிடைத்தி ருக்குமே''

கமலா தயாசேனவிடம் கேட்டாள்.

''பலகொட சந்திக் கடையில் தந்தார்கள். அந்துரன்விலயிலயும் கிடைத் தது. சிவப்பு முதலாளி.....''

''அது காணாதா?''

தயாசேனவின் கதையில் குறுக்கிட்டு அம்மா கேட்டாள்.

''எவ்வளவு தூரம் நடந்து சென்றோம்''

குறை கூறுமாப் போல் சுனில் சொன்னான்.

''அது பெரிய தூரமா.....ம்...''

''சின்ன வயதில் வெசாக் பார்க்க காலிக்குச் சென்று ஹிக்கடுவ வழியால் வீட்டுக்குத் திரும்புவோம். கிட்டத்தட்ட முப்பது மைல் இருக்குமென்று நினைக்கிறன்''

தயாசேன வயிற்றுப் பக்கமாக மறைத்துக் கொண்டு வந்த டை குப்பியையும் கறுப்புக் கண்ணாடியையும் தனது புத்தகப் பெட்டிக்குள் திணித்தான்.

பிள்ளைகள் இருவரும் வந்த பின்பே அப்பா வீட்டுக்கு வந்தார். அவர் வீட்டுக்கு வரும்வரையில் டீச்சர் மாமி வெளியே எட்டிப் பார்க்கவில்லை.

''தயாசேன''

அப்பா பெரியவனை அழைத்தார். தயாசேனவின் முகத்தில் அப்பிய சாயம் இன்னும் முழுமையாக அகன்றிருக்கவில்லை.

''ம் பெரிய சுவாமி என்ன சொன்னார்?''

அப்பா தயாசேனவிடம் கேள்வி எழுப்பினார்.

''எங்கட நிகழ்ச்சியைத்தான் அதிகமானவர்கள் பாராட்டினார்களாம்''

அப்பா வினவிய நோக்கத்திலல்ல தயாசேன பதில் சொன்னான்.

''அண்ணா அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களிடமிருந்து எங்களுக்கு பரிசும் கிடைக்கிறதல்லவா?''

சுனில் கதையில் சேர்ந்து கொண்டான்.

''அறநெறிப் பாடசாலை எதற்கு பரிசு கொடுக்கிறாங்க?''

அப்பா கேட்டார்.

''ஊர்வலம் நடக்கு முன்பே ஆசிரியர்கள் ஒன்று கூடினார்கள்.

பங்குபற்றும் சிறந்த நிகழ்ச்சிகள் இரண்டுக்கு பரிசு கொடுப்பதாக சின்னபிக்குவிடம் கூறியிருக்காங்க''

தயாசேன மேலும் விளக்கமளித்தான்.

''என்ன பரிசு?''

என்ன பரிசென்பதைத் தெரிந்து கொள்ளும் ஆவலில் அப்பா கேட்டார்.

''அடுத்த ஞாயிற்றுக்கிழமை அறநெறிப் பாடசாலையில் பரிசு கொடுப்பாங்கள்''

அது சுனிலின் குரல்.

''இனி முதலாம் பரிசைப் பற்றி மட்டுந்தான் சொன்னார்கள்''

அப்பாவுக்கு உற்சாகம் ஏற்பட்டுவிட்டது.

''இரண்டாம் பரிசு காற்சட்டை கோலத்திற்கு'' சுனில் சொல்லும் போதே டீச்சர் மாமி தனதறையிலிருந்து வெளியே வந்தார். அவர் சாய்கதிரையில் கால்கை நீட்டினார்.

''காற்சட்டைக் கோலத்தில் யார் நின்றார்கள்?''

டீச்சர் மாமியே கேள்வி கேட்டார்.

''அதில் நின்றவர் அப்புமாமா''

சுனில் அப்படிச் சொன்னான்.

''அப்புமாமா இங்க வருவாரா?''

மிகுந்த தேவையுடன் டீச்சர் மாமி விசாரித்தார்.

''இங்க வரமாட்டார். விகாரையில் தான் இருக்கார்''

''அப்புமாமா உங்கள் இருவரதும் நண்பனா?''

''ஓம்''

இருவரும் ஒன்றாகவே பதில் கூறினர்.

''அப்புமாமா போட்டுக் கொண்டு சென்ற கறுப்புக் கண்ணாடி அவருக்கு எப்படிக் கிடைத்தது?''

''எங்களுக்குத் தெரியாது''

''கூட்டாளிமார் தெரிந்திருக்கணுமே. இப்போ அதை வேண்டிக் கொண்டு வந்தீங்களா?''

''ஏன் அப்படிக் கேக்கிறிங்க டீச்சர் அக்கா?''

எதுவுமே தெளிவில்லாத நிலையிலேயே சிறிஸேன இவ்வாறு கேட்டார்.

''அப்புமாம போட்டுக் கொண்டு சென்றது என்னுடைய கண்ணாடிக் கூட்டமென்பதால்தான் அப்படிக் கேட்டன்''

சிறிஸேன ஆச்சரியப்பட்டார். கதை இப்பொழுது மிகவும் தெளிவாகி விட்டது.

''டீச்சர் மாமியின் கண்ணாடியை யார் எடுத்த நீங்கள்?''

சிறிஸேன முற்றத்திற்கிறங்கி வேலியால் தடியொன்று முறித்தெடுத்தார்.

''இங்க வாங்க..... சொல்லு..... யார் கண்ணாடியை எடுத்தது?''

''நானல்ல..... அண்ணன் தான்''

சுனில் பின்வாங்கினான்.

''பெரியவன் என்ன சொல்ற நீ?''

அப்பா கடுகடுப்பானார்.

''நான் தான் எடுத்தன். தம்பி உளவு பார்த்தான்''

''பார்த்தீங்களா சிறிஸேன?''

டீச்சர் மாமி கண்கள் விரிந்தன.

''இது பாவமென்று நான் அண்ணாவுக்குச் சொன்னன். தந்ததாதுவையும் களவாகத்தான் கொண்டு வந்ததாம்.... நல்ல விஷயங்களுக்கு களவெடுப்பது பாவமில்லயாம்''

அவ்வாறு சொன்ன சுனில் அழத் தொடங்கினான்.

''தேவையென்றா என்னிடம் கேட்டெடுத்திருக்கலாமே''

டை குப்பியையும் அண்ணன் தம்பி தான் எடுத்திருக்கிறார்களென்பது

டீச்சர் மாமிக்கு இப்பொழுது தெளிவாகிவிட்டது. இருந்தும் அது பற்றிக் கதைக்க விரும்பினாரில்லை.

"இரண்டு பேரும் சேர்ந்துதானே எடுத்தனீங்க"

அப்பா பிரம்பை ஆட்டியபடி கடுந்தொனியில் கேட்டார்.

"ஓம்"

இருவரும் ஒன்றாகப் பதில் கூறினர்.

"இரண்டு பேருக்கும் நினைவிருக்க நல்ல தண்டனை கொடுக்கணும்"

இருவரையும் நோக்கிச் சுட்டு விரலை நீட்டியபடி டீச்சர் மாமி சொன்னார்.

அம்மாவின் பாவாடையில் தொங்கிய செவ்வந்தி பயத்தோடு பார்த்துக் கொண்டிருந்தாள்.

தவறு தனது பிள்ளைகள் மீது என்பதால் கமலா எதுவும் பேசவில்லை.

"முதற் தடவை என்பதால் நான் இன்று விடுறன். இதன் பிறகு இப்படியான வேலைகள் செய்வதில்லையென்று டீச்சர் மாமியை வணங்கி மன்னிப்புக் கேளுங்கோ"

தான் பெரும் தவறு செய்திருப்பதாக தயாசேன உணர்ந்தான். அவர் டீச்சர் மாமியின் காலடியில் விழுந்து "இதன் பிறகு இவ்வாறான வேலை செய்வதில்லை" என்று சொன்னான்.

சுனிலும் அதைப் பின்தொடர்ந்தான்.

டீச்சர் மாமி எதுவுமே கூறவில்லை. அறையுள் சென்று சாய்ந்து கொண்டார்.

அவருக்கு களைப்பு மேலிட்டது. தலைக்குக் கீழே ஏதோ துடிதுடிப்பது போலிருந்தது.

# 6



அடுத்த நாள் அப்பா கொழும்பு வேலைத்தலத்திற்கு செல்லத் தயாரானார்.

''அக்கா இவங்களுக்கு ஒன்றும் விளங்காது. கொஞ்சம் புத்திமதி சொல்லணும். ஏனென்றால்...... நானும் வீட்டிலிருப்பதில்லயே''

''எல்லாம் போதும் போதுமென்றாகிவிட்டது சிரிஸேன. கொழும்புக்கே போய் நின்றால் இதை விட நல்லது போலிருக்கு''

''ஐயோ அக்கா மனதைக் குழப்பிக் கொள்ளாதீங்க. எங்களால் முடிந்தளவு கவனிக்கிறம். உள்ளதைச் சாப்பிட்டிட்டு இருக்கலாந்தானே''

கொழும்புக்குப் போகத் தயாராகி வெளியே வந்த அப்பா தயாசேனவை அழைத்தார்.

''பெரியவன்..... டீச்சர் மாமிக்கு கீழ் படிந்து நடக்கணும் சரிதானே?''

''சரி அப்பா''

சிரிஸேன சென்றபின் டீச்சர் மாமி அறைக்குள் சென்று கட்டிலில் சாய்ந்தாள். தனிமையைப் போக்குதவற்காக புத்தகமொன்றை வாசிக்க லானார். இருந்தும் மனதுக்குள் எதுவுமே ஏறவில்லை.

கொழும்பு பேமெண்டில் மணிமாலை விற்கும் யசவதி மாமியின் மகன் சமரஸேன இந்நாட்களில் ஊர் வந்திருந்தான்.

கையிலே தங்கச் சங்கிலியும் விரல்களில் இரண்டு மூன்று மோதிரமும் அணிந்து கொண்டு எப்பொழுதுமே ஆடம்பரத் தோற்றத்துடன் காணப் படுவான். அங்குமிங்கும் போகும்போதெல்லாம் செயற்கையாக சுருள் படுத்திய முடியை கையால் தடவித் தடவியே செல்வான்.

சமரஸேன செல்லும் வழியில் இரண்டு மூன்று நிமிடம் கழிந்தாலும் நறுமணம் மாறுவதில்லை. அவன் கொண்டு வந்திருந்த ஸ்டீரியோ கெஸட் ரெகோடர் முழு ஊருக்கும் கேட்கக் கூடியதாகப் பாடிக் கொண்டிருக்கும்.

''திறவும் வாயிலை இது எங்கள் குழாய்நீர்
ஒழுங்கைக்கு நீர் வழங்கும் எங்கள் குழாய் பார்.

கல்கிஸ்ஸ ஹோட்டல் அருகிலே
ஆதனாய ஹோட்டல் அருகிலே.....''

ஓய்வொழிச்சலின்றி இருபத்திநான்கு மணி நேரமும் சமரஸேன வீட்டிலிருந்து பைலா வெளியே பரவியது.

''யாருடைய கெஸட் இது?''

டீச்சர் மாமி தெரியாமல் இதுபற்றி விசாரிக்கவில்லை.

''இது யசவதி மாமியின் மகன் சமரஸேன ஊருக்கு வந்திக்கிறான்''- கமலா சொன்னாள்.

''சமரஸேன மட்டுமல்ல, அவனோட பைலாகாரர்களும் வந்திருக்காங்க போலிருக்கு..... அவங்களுக்கு போன காலம்......

''எங்களுக்கும் காதை வைத்துக் கொண்டு இருக்க முடியாமலிருக்கு. பக்கத்தில் இருப்பதற்காக என்னதான் செய்ய முடியும்........

''அற்பனுக்கு பவிசு வந்தால் அர்த்த ராத்திரியில் குடை பிடிப்பாங்க ளாம்..... ம்..... புத்தகமொன்று வாசிக்க முடியல்ல...... இவங்க உபத்திர வம் தாங்க முடியல்ல.... சே.....''

''பிள்ளைகள் நீண்ட காலத்துக்குப் பிறகு வீட்டுக்கு வந்தால் இப்படித்தான்''

ஏதோ சொல்லப் போய் யசவதி ஒரே போடு போட்டாள். கமலா மௌனித்துப் போனாள்.

''யசவதிக்குப் பிள்ளைகள் இருக்கென்று அடுத்தவங்க பலியில்ல. எனக்கும் ஒரு நாள் ஆற்றுத்துறையில் வைத்து ஏதோ சொல்லிக் கொண்டு வந்தான்''

''என்ன அக்கா சொன்னான்?''

''பிள்ளையுள்ள அம்மாக்கள்
பிள்ளைச் செல்லம் காட்டுவர்
பிள்ளையில்லா அம்மாக்கள்
பொருமி முகம்கோணுவர்''

''என்று பாடிக் கொண்டு போறான். பதிலடி கொடுக்க நினைத்தன். ஏன் வீண் பிரச்சினையென்று பேசாமலிருந்துவிட்டேன்''

✧✧✧✧✧✧✧✧✧✧✧

இந் நாட்களில் இடையீடின்றி மண் சுமந்த லொறி, டிப்பர் என்பன பாதை நெடுக வக்வல்லைப் பக்கமாகப் பறக்கும்- இடிந்து பதிந்துள்ள பாதையை இட்டு நிரப்பும் துரித பணி இது. இதனால் கிளம்பும் தூசு காற்றோடு கலந்து போய் விழுவது டீச்சர் மாமியின் அறைப் பக்கமாகத் தான். பாதைக்கு மிக அருகேயுள்ள அறை அதுதான்.

''இது சனங்களுக்கு தொந்தரவான முறையில் செய்யும் வேலையல்ல. தூசி பரவுமென்றால் தண்ணீர் ஊற்ற வேண்டும். அதுதான் சட்டம்''

வீட்டில் எல்லோருக்கும் கேட்கும் விதமாக டீச்சர் மாமி சொன்னார்.

பாடசாலை விட்டு வரும் தயாசேனவும் சுனிலும் இன்னும் பிள்ளைகளோடு சேர்ந்து அங்குமிங்குமாகப் போகும் லொறியிலோ டிபரிலோ ஏறி ''ஹ..... ஹோ...'' என்று சத்தமிட்டுக் கொண்டு செல்வர். இதைக் காணும் டீச்சர் மாமிக்கு கடுங் கோபமேற்படும்.

''பாவத்துக்கு பரிகாரமில்லையே''

தனக்குத் தானே சொல்லிக் கொண்டார்.

வெயிலின் அகோரமும், தூசுப் படலமும், பைலா ஓலமும் டீச்சர் மாமியின் உடலை முடமாக்கி மனதைக் கோபமூட்டின.

''பார் கமலா நான் இந்த விஷயங்களுக்கு அதிகம் கைபோட மாட்டன். உனது பிள்ளைகளைப் பற்றி நீ யோசித்துப் பார். இவங்க தேங்காய் ஆயிரத்த தவிர, வேறொரு வேலை செய்யக் கூடிய நிலைக்கு வருவாங்களா?''

''ஐயோ எனக்குத் தெரியாதக்கா''

''எல்லா விஷயத்துக்கு அப்படிச் சொல்லிச் சரிவரப் போறதில்ல''

✧✧✧✧✧✧✧✧✧✧✧

''இதைத் தடுக்கவென்றால் முடியாது''- என்று மாமி தனியே சொல்வது கமலாவுக்குக் கேட்டது.

''அக்காவுக்கு முன்னறை கஷ்டமென்றால் உள்ளறைக்கு வாங்க''

''சரி''

''நான் எங்கள் அறையிலிருந்து சாமான்களை வெளியே எடுக்கிறன்''

கமலா சொன்னாள்.

''ஓம் அது நல்லது தான்''

கமலா தனதறை சாமான்களை வாசலுக்கும், இன்னொரு பகுதியை சமையலறைக்கும் இழுத்தாள். வெறுமையான அறையில் டீச்சர் அக்கா வின் சாமான்களை வைப்பதற்கும் உதவினாள்.

சாமான்களை ஒதுங்க வைத்த பிறகு டீச்சர் மாமியின் உடலில் களைப்புத் தெரிந்தது. இடைவிடாது தும்மவும் தொடங்கினார்.

பாடசாலை விட்டு வீட்டுக்கு வந்த தயாசேன அவசர கோலத்தில் முன்னைய அறைக்கே ஓடிச் சென்றான். சுனிலும் அவன் பின்னால் சென்றான்.

திடுக்கிட்டு நின்ற தயாசேன அங்குமிங்கும் பார்த்தான். வெளியே இருந்து வந்ததால் கண்களுக்கு ஒன்றும் தெளிவாகத் தெரியவில்லை.

மூலைக் கட்டிலில் டீச்சர் மாமி சாய்ந்திருக்கும் தோற்றம் சற்று நேரம் நகர்கையில் அவனுக்குத் தெரிந்தது.

அறை மாற்றியது தொடர்பாக டீச்சர் மாமியிடம் விசாரிக்க தயாசேன பயந்தான். அவர் எந்த நேரம் பாய்ந்து விழுந்து தனது விருப்பமின்மையை வெளிக் காட்டுவாரென்று அவனால் தீர்மானிக்க முடியவில்லை.

அனுமதியின்றி கறுப்புக் கண்ணாடியை எடுத்தபின் டீச்சர் மாமி பிள்ளைகளுக்கு புத்திமதி சொல்லக் கூட முனையவில்லை. அது ஒரு வகையில் நிம்மதியான போதும், டீச்சர் மாமியுடனிருந்த சகல தொடர்புக ளும் அதனால் முற்றுப் பெற்று விட்டது போல் அவனுக்குத் தெரிந்தது. இதனால் மனதில் ஏதோவொரு வெறுமை ஏற்பட்டுள்ளதாக அவன் உணர்ந்த போதிலும், அது என்னவென்று அவனுக்குப் புரியவில்லை.

சாலைக் கதிரையொன்றில் புத்தகங்களைப் போட்ட தயாசேன, நேரே சமையலறைக்குச் சென்றான். அம்மாவும் தங்கையும் அங்கே என்ன செய்கிறார்களென்று எட்டிப் பார்த்தான.

''அம்மா அதென்ன செய்திருக்கிறீங்கள்?''

அம்மாவுக்கு மாத்திரம் கேட்கக் கூடியதாக அவன் வினவினான்.

''அது பற்றி ஒன்றும் கதைக்க வேணாம். டீச்சர் மாமியின் தேவைக்கு அறையை மாற்றினோம்''

''இனி அம்மா......''

''ஒன்றும் சொல்லிப் பயனில்ல. அறைக்குள் தூசி வருவதாக டீச்சர் மாமி சொல்றா''

சுனிலும் சமையலறைப் பக்கம் வந்த போதும் மாற்றம் பற்றி எதுவும் சொல்லவில்லை.

''தூசி வருகிறதென்றால் ஓட்டைகளுக்கு கடதாசி ஒட்டிக் கொடுப்போம்''

''இப்போ அது பற்றி ஒன்றும் கதைக்க முடியாது. நாங்கள் எங்கள் சமான்களை முன்னறைக்குக் கொண்டு போவோம்''

''எனக்கென்றால் முடியாது''

''முடியாதென்றால் எப்படி மகன்''

''சொல்லுவீங்கள். மாலையில் பள்ளிக்கூடத்துக்கு ஸேர் வரச் சொல்லியிருக்கார்''

''இது என்னத்துக்கு?''

''விளையாட''

''ஐயோ எனக்குத் தெரியாது. விளையாடப் போய் கால் கையை உடைத்துக் கொள்ள வேண்டி வரும்''

''அம்மா ஸேர் பார்த்துக் கொண்டிருப்பார்''

''எந்த ஸேர்?''

''புதிதாக வந்த சிறிவர்தன ஸேர்''

சோறு சாப்பிட்டதும் சாப்பிடாததுமாய் அண்ணன் தம்பி இருவரும் பாடசாலைக்குப் போகத் தயாரானார்கள்.

''சின்னவன் ஏன் போகணும்?''

அம்மா கொஞ்சம் கோபத்தோடு கேட்டாள்.

''ஐயோ அம்மா எனக்குச் சோம்பல். மற்றது அண்ணாவைப் பற்றி ஏதாவது சொல்வதற்கும் நான் மாத்திரந்தான் இருக்கிறன். விளையாடுவது பார்க்க நானும் போறனம்மா''

அம்மா எதுவும் சொல்லவில்லை.

''அம்மா அங்க ரெண்டுபேரும் போறாங்கள்''

தூரத்தில் போய்க் கொண்டிருந்த அண்ணன்மாரை அம்மாவுக்குக் காட்டி செவ்வந்தி சொன்னாள்.

''மகளுக்கு நான் அப்பா கொண்டு வந்த புத்தகமொன்று தாரன். வாச லில் இருந்து பாருங்கொ''

அழகழகான படங்களுடன் கூடிய ஆங்கிலவ் சஞ்சிகையொன்றை கமலா மகளது கையில் கொடுத்தாள். செவ்வந்தி வாசல் கதிரையொன்றில் அமர்ந்து புத்தகத்தைப் புரட்டிக் கொண்டிருந்தாள்.

அறையில் நின்ற டீச்சர் மாமி மீண்டும் தும்பத் தொடங்கினாள்.

செவ்வந்தி நிலைப் பிடவையை சற்று அகற்றி உள்ளே எட்டிப் பார்த்தாள்.

சற்றே இருளுடன் கூடிய அறையிலிருந்த டீச்சர் மாமி, அவளுக்குத் தெளிவாகத் தெரியவில்லை.

''டீச்சர் மாமி''

செவ்வந்தி மாமியைச் செல்லமாக அழைத்தாள்.

டீச்சர் மாமி எதுவுமே கதைக்கவில்லை.

''டீச்சர் மாமி''

இம்முறை சற்றே உயர்ந்த குரலில் அழைத்தாள்.

''ஏன்?''

''மாமீ, மாமிக்கு சுகமில்லையா?''

''இல்லை''

டீச்சர் மாமியிடமிருந்து குறுகிய பதிலே கிடைத்தது.

''மாமீ, மாமீட பிள்ளைங்க எங்க?''

சட்டி, பீங்கான் கழுவிக் கொண்டு வந்த கமலாவுக்கு, செவ்வந்தியின் கேள்வி கேட்டது.

''மகள் இங்க வா''

''மாமி..... உங்கட மாமா எங்கே?''

செவ்வந்தி கேட்ட கேள்விகளால் டீச்சர் மாமி திடுக்கிட்டுப் போனார். அவளுக்கு தனிமையும் களைப்பும் மேலிட்டது. தான் பாதுகாப்பற்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக நினைவு வந்தது. பிள்ளைகள் இல்லாததால் கடைசி காலத்தை முதியோர் மடத்தில் கழிக்க நேரிடுமோ என்ற ஐயம் மனதில் அலைமோதியது.

''இனி மாமீ, மாமிக்கு யாருமே இல்லயா?''

''சின்ன மகள்''

அறைக் கதவருகே செல்லக் கமலா பயந்தாள். ஆனாலும் செவ்வந்தி வருவதாக இல்லை.

''பாவம்..... மாமி எங்கள் வீட்டிலேயே இருங்க''

டீச்சர் மாமி கோபத்தால் வெடித்துக் கொண்டிருந்தார். அது அவரது இரு கண்களிலும் பொங்கிய போதிலும், இருட்டென்பதால் செவ்வந்தியால் அவதானிக்க முடியவில்லை.

''ஏன் மாமி கதைக்கமாட்டீங்க? என்னோடு கோபமா?''

''மகள்..... இங்கால வரச் சொல்லியல்லவா சொன்னன்''

அம்மா கடுமையாகக் கத்தினாள்.

கேள்வி கேட்டபடி செவ்வந்தி அறைக்குள் புகுந்திருந்தாள். அவள் அறையிலிருந்து வெளிப்பட்டதும், டீச்சர் மாமி வீடே அதிரும் விதமாக கதவை மூடினார்.

தலைவேறு சுற்றவும் வலிக்கவும் தொடங்கிவிட்டது. டீச்சர் மாமி உணர்வற்றவராக கட்டிலில் சாய்ந்தாள்.

''சின்னவங்கள் சொல்வது, பெரியவர்கள் நினைப்பது கதைப்பதைத் தான். நான் புண்ணியத்திற்கு நிற்க வரவில்லை. எனக்குச் செய்யும் உதவிக்கு நானும் ஏதாவது செய்ய நினைத்துக் கொண்டிருந்தன். இந்தப் பேய்களுக்கு.....''

''அம்மா டீச்சர் மாமிக்கு கோபம் வந்திட்டுது. நான் போய்ப் பார்க்கட்டுமா?''

''போறதில்ல..... என்னென்ன நடக்குமென்று தெரியாது. டீச்சர் மாமிக்கு கோபம் வந்தால் நல்ல அடி விழும்..... ம்..... இதுக்கு மேல் ஒன்றும் சொல்ல மாட்டன்''

செவ்வந்தி டீச்சர் மாமியின் அறைக் கதவை கொஞ்சம் திறந்து எட்டிப் பார்த்தாள். பின்னர் ''ஹி ஹி'' என்று சிரிக்க ஆரம்பித்தாள்.

''சின்ன பிசாசு நான்''

டீச்சர் மாமி தும்புத் தடியைத் தூக்கியதும் வாசலுக்குக் குறுக்காக ஓடிச் சென்று அம்மாவின் பிடவையில் தொங்கினாள் செவ்வந்தி.

# 7



யசவதி மாமியின் வீட்டிலிருந்து பைலா ஆட்டம் இன்று அதிகாலை யிலேயே ஆரம்பித்துவிட்டது. டீச்சர் மாமி மற்ற நாட்களைவிட நேரகாலத் தோடு கண் விழிக்காவிட்டாலும் கூட, கெஸட் ரெகோடலிருந்தெழுந்த பெரும் சத்தம் தான் அவளை எழும்பச் செய்தது.

இரவு உடையுடனே முற்றத்துக்கு வந்து, யசவதி மாமியின் வீட்டை மரம் செடிகளுக்கூடாக கூர்ந்து பார்த்தார் டீச்சர் மாமி.

''என்ன யசவதி இது. காலையிலே இருந்து இரவு வரைக்கும், இரவிலி ருந்து விடியும் வரைக்கும் இந்த ஒப்பாரி. அக்கம் பக்கத்திலுள்ள பிள் ளைங் களுக்கு பாடம் படிப்பிக்க முடியாது. நிம்மதியாக யாரும் தூங்க முடியாது''

''எங்கட சாமான் எங்கட விருப்பம்''

''உங்கடயென்று மற்ற மனிதருக்கு கஷ்டங் கொடுக்க முடியுமா? ம்...... எந்தச் சட்டப்படி அப்படிச் செய்ய முடியும்.''

இப்படி ''ஹ ஹூ'' என்று தர்க்கம் போடுவதை எட்டிப் பார்த்த சமரஸேன, கெஸட் ரகோடரின் சத்தத்தை மேலும் கூட்டிவிட்டான்.

டீச்சர் மாமியின் கோபம் எல்லை மீறிச் சென்றது.

''எங்கட காசென்று அடுத்த மனிதர் அதற்கு பலியாக முடியாது.... பேய்கள்.....''

''ஐயோ டீச்சரக்கா. அக்கம் பக்க ஆக்களல்லவா? நீங்க பேசவேணாம்''

''என்ற பேச்சையல்ல அவங்க சத்தத்த நிற்பாட்டச் சொல்லு. தொந்தரவு தாங்க முடியல்ல. நீயும் வாராய் எனக்குச் சட்டம் போட''

கமலா வேலியோரமாக யசவதியின் வீட்டருகே சென்றாள்.

''ஐயோ தம்பி சமரஸேன..... அந்த சத்தத்த கொஞ்சம் குறையன்''

''பிள்ளைகுட்டியில்லாதவ, இனி பிள்ளைங்கட அருமை எப்பிடித் தெரியவரும்''

''பிள்ளைங்கட அருமபெருமய எனக்குச் சொல்லித் தர வாரியா யசவதி. ஒன்று ரெண்டல்ல முழு நாட்டிலுமே இருக்கிற பிள்ளைங்க கண்களைத் திறந்துவிட்ட பெண் நான்''

கமலாவின் வேண்டுகோளுக்கு செவிசாய்த்த சமரஸேன கெஸட் இயந்திரத்தின் சத்தத்தை மிகவும் குறைத்து விட்டான்.

ரகோடரின் சத்தம் குறைந்தாலும் அறைக்குச் சென்ற டீச்சர் மாமி கதவு மூடும் சத்தம் அகோரமாக எழுந்தது.

✧✧✧✧✧✧✧✧✧✧✧

மாலையில் விளையாட்டுப் பயிற்சிக்குச் சென்ற தயாசேன சிறிவர்தன ஸேரை சந்திக்கச் சென்றான். அதுவரையில் விளையாட்டுக்கான மாணவர்கள் எல்லோரும் வந்து சேர்ந்திருக்கவில்லை.

பாடசாலை முற்றத்து மாமர நிழலில் அமர்ந்திருந்த சிறிவர்தன ஸேர் மைதானத்தில் கண்களைச் செலுத்திக் கொண்டிருந்தார்.

''ஸேர்''

பின்பக்கம் திரும்பிப் பார்த்த ஆசிரியருக்கு அங்கே தயாசேனவைக் காண முடிந்தது.

''தயாசேனவை சந்திக்கும் வரை நான் பார்த்துக் கொண்டிருந்தன்.''

''ஏன் ஸேர்?''

''முன்பு நேர காலத்தோடு பாடசாலைக்கு வந்த நீ, இப்பொழுது அநேகமாக பாடசாலை தொடங்கிய பின்பே வருவதைப் பார்க்கிறன்''

தயாசேன அப்பாவி போல் சிரித்தானே தவிர, பதில் எதுவும் சொல்லவில்லை.

அதன் மூலம் ஆசிரியரின் ஆவல் இன்னும் அதிகரித்தது.

''ஏதாவது பிரச்சினையா? சொல்லு. கதைத்து அதிலிருந்து விடுபடப் பார்ப்போம். ஆசிரியரிடம் சொல்ல முடியாத பிரச்சினை மாணவரிடம் இருக்கமுடியாதல்லவா?''

''பிரச்சினை தான் ஸேர்...... ஆனாலும்....''

''சொல்லன்..... எங்களால் தீர்வு சொல்ல முடியுமோ என்னவோ தெரியாது''

''நான் ஸேருக்கு முன்பு சொன்னேனல்லவா, எங்கள் வீட்டிலிருக்கிற மாமியைப் பற்றி....''

''ஓம் அவர் மூலம் தயாசேனவும் தம்பியும் நிறையப் பயனடையலாம். அதுமட்டுமல்ல, முழு ஊரும் பயனடையலாம். ம்..... இப்பொழுது என்ன பிரச்சினை?''

''மாமி இப்பொழுது பைத்தியம் போல் நடந்து கொள்கிறார்''

''மாமிக்கு வேறு யார் இருக்காங்க?''

''அண்ணன் தம்பிமார் இருக்காங்க..... வெளிநாட்டில்''

''மாமி திருமணம் செய்திருக்காவா?''

''இல்லை''

''அதுவும் பிரச்சினைதான். அவருடைய சகோதரர்கள் பார்க்க வருவதில்லையா?''

''இல்லை''

''கடிதங்கள்''

''அப்படி ஒன்றுமில்லை''

சிறிவர்தன ஸேர் சில விடயங்களைப் புரிந்து கொண்டாற் போல் தலையாட்டினார்.

''அப்படியானவர்கள் நிறைய அன்பை எதிர்பார்ப்பார்கள். அன்பு கிடைக்காவிட்டால், அது எவராக இருந்தாலும் பைத்தியம்தான் பிடிக்கும். சமயப்படி பார்த்தாலும் மனோதத்துவப்படி பார்த்தாலும் அதுதான் உண்மை''

''இனி ஸேர் இதற்கு என்ன செய்யணுமென்னு நினைக்கிறீங்க?''

''அதற்கு நல்லதொரு ஆலோசனை பெற முடியும். ஞாயிற்றுக் கிழமை காலை பத்து முப்பதுக்கு சேவை ஒன்றில் 'மனநலம்' என்று நல்லதொரு நிகழ்ச்சி இருக்கு. குணாநந்த தேரரும் மேலும் மனோதத்துவ டாக்டர்களும் இதனைச் செய்கிறார்கள்''

''எப்படி ஸேர் தொடர்பு கொள்வது?''

சிறிவர்தன ஸேர் தனது காற்சட்டைப் பொக்கற்றிலிருந்து பேனை எடுத்தார்.

''இது தான் அந்த நிகழ்ச்சியின் தொலைபேசி இலக்கம். பூச்சியம் ஒன்று எண்பத்தெட்டு தொண்ணூற்றிரண்டு இருபத்திமூன்று''

பேர்ஸிலிருந்து வெற்றுக் கடதாசித் துண்டொன்றில் ஸேர் இந்த இலக்கத்தைக் குறித்தார்.

''வேண்டுமென்றால் கடிதம் கூடப் போடலாம். 'மனநலம்' தயாரிப்பாளர், தமிழ் சேவை ஒன்று, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், கொழும்பு-07''

விளையாட்டுப் பயிற்சியை முடித்துக் கொண்ட தயாசேன வீட்டுக்கு வரும் போது ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துடன் எவ்வாறு தொடர்பு கொள்வதென்றே சிந்தித்தான். டீச்சர் மாமியின் செல்டெல்லை எப்படியும் எடுக்க முடியாது.

ஏதோ ஒரு வகையில் எடுத்துப் பிடிபட்டால் அப்புறம் என்ன நடக்குமென்று அவனால் நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை.

வீட்டுக்கு வரும் வழியில் விகாரைக்கு எதிர்வீட்டுக் கறுப்பு மாமியின் மகன் ஜினபாலவையும் அழைத்து வர தயாசேன மறக்கவில்லை. அவன் பாடசாலைக்குப் போகாவிட்டாலும் தெளிவான புரிதலும் எதையும் செய்யும் திறமையும் வாய்க்கப் பெற்றவன்.

வேறு நாட்களில் பெருந் தெருவினூடாக வரும் தயாசேன இன்று மஸ்ஸல வழியாகத்தான் வந்தான். ஏனென்றால் சிவப்பு முதலாளியின் மகன் மஞ்சுலவையும் சந்திக்கும் எண்ணத்தோடுதான்.

மஞ்சுல பாலத்தடி தென்னந்தோப்பில் கிரிக்கட் விளையாடிக் கொண்டிருந்தான்.

தயாசேன மஞ்சுலவை அழைத்தான். அவன் விளையாட்டை சற்று நிறுத்தி, எதற்காக அழைத்தானென்று அறிந்து கொள்வதற்கா்க வந்தான்.

''மஞ்சுல அண்ணா..... எங்க டீச்சர் மாமிக்கு நன்றாகச் சுகமில்லை. வானொலியில் நிகழ்ச்சியொன்றிருக்காம். அதைக் கேட்டுப் பார்க்கச் சொல்லி சிரிவர்தன ஸேர் சொன்னார். இதுதான் தொலைபேசி இலக்கம்''

மஞ்சுல தலையைச் சொறிந்தான். கடுமையாக யோசித்தான். அப்பாவின் செலியூலர் தொலைபேசியை எப்படி எடுக்கலாமென்று தெரியவில்லை. அவர் எங்கு சென்றாலும் அதனைக் கையிலேயே வைத்திருப்பார்.

''சரிதான் எங்கள் கடை மெனேஜரிடம் எடுத்து வாரன். அவரிடமும் ஒரு செல்டெல் இருக்கு. ஆனால் காட் ஒன்று வாங்கவேணும். அதற்கு முந்நூறு ரூபா''

''வானொலியொன்று எப்படித் தேடிக் கொள்வது? எங்கள் வீட்டிலென் றால் இல்லை''

ஜினபால வானொலியொன்று கொண்டு வருவதாக வாக்களித்தான்.

''யாருமில்லாத ஓர் இடத்துக்குச் சென்று தான் இந்த நிகழ்ச்சியைக் கேட்கவேண்டும். இல்லாவிட்டால் வாய்க்கு வாய் சென்று டீச்சர் மாமிக்கு தெரிய வந்துவிடும்''

''நான் சொல்றன். இப்பொழுது ஆற்றிலே தண்ணீர் அதிகம். செங்கல் சூளையிலே யாருமே இல்லை''

ஜினபால ஆலோசனை தெரிவித்தான்.

''அப்படியென்றால் ஞாயிற்றுக்கிழமை காலை ஹல்லல ஆற்றுத்துறைக்கு வாருங்கள்''

அப்படிச் சொன்ன மஞ்சுல தென்னந் தோட்டத்துக்கூடாகச் சென்றான்.

✧✧✧✧✧✧✧✧✧✧✧

ஞாயிறு காலை மஹதூன் அண்ணாவிடம் பாதைப் படகை வேண்டி மஞ்சுல, ஜினபால, தயாசேன ஆகியோர் அதில் ஏறிக் கொண்டனர். தயாசேன அம்மாவின் அனுமதியோடு ஆறு இளநீர் பறித்து தாழைத்திடலில் ஒளித்து வைத்திருந்தான். வீட்டிலிருந்து கொண்டு வந்த கத்தி, தென்னை இளநீர் என்பவற்றைப் படகுக்கு ஏற்றினான்.

ஆற்றிலே ததும்பி வழியும் நீரோட்டத்தோடு அவர்கள் படகைத் தொடுத்தனர். பெரிய ஆற்றருகில் அமைந்த சுண்ணாம்புச் சூளைக்குச் சென்று அங்கே சேவை ஒன்றில் ஒலிபரப்பாகும் நிகழ்ச்சியைக் கேட்கத் தயாராகினர்.

மஞ்சுல கடை முகாமையாளரின் செல்டெலைக் கொண்டு வந்திருந்தான். தயாசேனவின் உண்டியலை உடைத்து அதிலிருந்து முன்னூறு ரூபாவுக்கு செல்காட் ஒன்று எடுத்து வைத்திருந்தனர்.

செங்கல் சூளைக்கருகே படகு நிறுத்தப்பட்டது. படகின் கயிற்று நுனியைப் பிடித்துக் கொண்டு ஜினபால கரைமேட்டுக்கு ஏறினான். அங்கு நின்ற புன்னை மரத்தில் கயிற்றை இறுக்க முடிந்துவிட்டான்.

தென்னங்குறும்பைகள் ஒவ்வொன்றால் தயாசேன மேட்டுக்கு வீசினான். படகின் நடுப் பலகையில் வைத்திருந்த சிறிய வானொலியையும் கத்தியையும் எடுத்துக் கொண்டு தயாசேனவும் கரை மேட்டு ஏறினான். செல்டெல் மஞ்சுலவின் கையில் காணப்பட்டது.

செங்கல் அடுக்குக்கு மேல் வானொலியை வைத்த ஜினபால தமிழ்ச் சேவை ஒன்றில் மீற்றரைத் திருகினான்.

பத்துமணி நிகழ்ச்சி முடியும் கட்டத்திலிருந்தது.

''காசு பணம் திடீரென்று
கள்வர் கொண்டு போய்விடுவர்
நூல்படித்துப் பெற்ற கல்வி
நாளெல்லாம் நிலைத்திருக்கும்

உலகை வென்று பழகித்திரிய
வாரும் எனது தங்கையே
வாரும் எனது தம்பியே''

''இப்பாடலைப் பாடியவர் நந்தா மாலினி.''

''இப்பொழுது முதல் 'மனநலம்' நிகழ்ச்சியைக் கேட்பதற்கு நாங்கள் உங்களை அழைக்கிறோம். இந்த நிகழ்ச்சியை களனிப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கௌரவ வெலிகம குணாநந்த தேரர் நடாத்துவார். உங்கள் வாழ்வின் பிரச்சினை, முரண்பாடுகள் தொடர்பாக நேரடியாக உரையாடும் இந்நிகழ்வில் நீங்களும் பங்கு பற்றலாம்''

அறிவிப்பின் ஒவ்வொரு வார்த்தைக் கூடாகவும் என்ன சொல்கிறாரென்று அறிவதற்கு அவர்கள் ஆர்வம் காட்டினர்.

''தயாசேன ரெலிஃபோன் நம்பரை எடு''

தயாசேன தனது இரண்டு பொக்கற்றிலும் அதனைத் தேடினான்.

''நல்ல வேலயப்பா.... அவசியமானதைத் தான் கொண்டு வரவில்லை''

மஞ்சுல சற்றே கோபத்தோடு சொன்னான்.

''எனக்கு நல்ல ஞாபகம். வீட்டில் வைத்து புத்தகத்துக்குள்ளிருந்து கைக்கு எடுத்தன்''

''இன்னும் கொஞ்சம் பார்''

ஜினபால கூறினான்.

காற்சட்டையில் பின் பொக்கற்றில் பழைய கடிதக் கவரொன்று செருகப்பட்டிருந்தது. சற்று நேரத்தில் தொலைபேசி இலகத்தை தயாசேன எப்படியோ தேடிக் கொண்டான்.

தெளிவான ஒலியைப் பெற்றுக் கொள்ள ஜினபால வானொலியை அங்குமிங்கும் அசைத்தான். ஏரியலை முடிந்தளவு உயர்த்தினான்.

''மஞ்சுல அண்ணா செல்டெல்லை எனக்குத் தருவீங்களா?''

''அதிலிருக்கிற நம்பர அழுத்துங்க. துண்ட இங்க தாங்க நான் நம்பரச் சொல்லுறன். எண்பத்தெட்டு, தொண்ணூற்றி இரண்டு, இருபத்தி மூன்று''

எந்தச் சத்தமும் வரவில்லை.

''என்ன செய்தாய்?''

''எண்பத்தெட்டு.... தொண்ணூற்றி இரண்டு, இருபத்திமூன்று அடித்தன்''

''என்னடா.... கொழும்புக்கு டெலிஃபோன் பண்ணும்போது முதலில் பூச்சியம் ஒன்று அடிக்கணுமல்லவா?''

''எனக்கெப்படித் தெரியும்..... மஞ்சுல அண்ணாவே டெலிஃபோன் செய்யுங்கொ''

மஞ்சுல சரியான இலக்கத்தை அழுத்தினான். சிறிய இடைவெளியுடன் ''பீச் பீச்'' எழ ஆரம்பித்தது.

''என்கேஜ்''

''அதன் கருத்து?''

ஜினபால கேட்டான்.

''வேறொருவர் கதைத்துக் கொண்டிருக்கார்''

மீண்டும் இலக்கத்தை அழுத்திய மஞ்சுல ''ஆ..... இந்தமுறை சரி வரும்'' என்றான்.

வானொலி அறிவிப்பார் கதைக்கத் தொடங்கினார்.

''ஹலோ....''

மஞ்சுலவின் குரல் வானொலிக் கூடாக வெளிப்பட்டது. ஜினபாலவும் தயாசேனவும் ஆச்சரியத்தோடு பார்த்துக் கொண்டிருந்தனர்.

''ஆம் எங்களுக்குக் கேட்கிறது. கதையுங்கள்..... எங்கிருந்து கதைக் கிறீர்கள்?''

"போத்தலயிலிருந்து கதைக்கிறம்"

"ஆம் பிரச்சினையை சுருக்கமாகச் சொல்லுங்கள்"

"எங்கள் மாமியொருவர் இருக்கிறார். அவரது சகோதரர்களெல்லாம் வெளிநாட்டிலிருக்கிறார்கள். அவருக்கு இங்கு யாருமில்லை"

"மாமிக்குப் பிள்ளைகள் இருக்கிறார்களா?"

நிகழ்ச்சிக்கு வருகை தந்திருந்த டாக்டர் இவ்வாறு கேட்டார்.

"இல்லை. திருமணம் செய்யவில்லை"

"சுருக்கமாச் சொல்லுங்கள்.... இப்பொழுது மாமியின் நிலைப்பாடு என்ன?"

"அவர் ஓய்வு பெற்ற ஆசிரியை. இப்பொழுது விசர் பிடித்தவர் போல் நடந்து கொள்கிறார்"

"போத்தல என்று சொன்னீங்களல்லவா?"

"ஓம்"

"காலி- போத்தலயா?"

"ஓம்"

"நாங்கள் 'மனநலம்' நிகழ்ச்சியை ஒவ்வொரு பிரதேசத்திற்கும் சென்று நடாத்த எதிர்பார்க்கிறோம். எங்கள் சுவாமியாருடனும் டாக்டர்களுடனும் அடுத்த வாரம் தென்பகுதிக்கு வருகிறோம்..... உங்கள் கிராமம் பற்றியும் யோசிக்கிறோம்.

"இப்போதைக்கு இக் கலந்துரையாடல் தொடந்துவ பிம்மாராமய, அடுத்து சந்தாவல துடுகெமுனு விகாரை, பலகொட புராணமகவிகாரை, காலி துவக்கலவத்த விகாரை ஆகிய இடங்களில் நடைபெறும். அந்தந்த இடங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

"இதில் தாங்கள் விரும்பிய இடத்துக்கு வரமுடியும்"

"மிகவும் நன்றி"

மஞ்சுல கதையை முடித்தான்.

## 8



தயாசேன இந்தத் தகவலைச் சொல்வதற்காக அன்று பகல் விகாரைக்குச் சென்றான். விசேடமாக இதனை சின்னபிக்குவிற்கு சொல்ல வேண்டியிருந்தது.

படிகளில் ஏறிச் சென்று பிக்குமார் தங்குமிடத்திற்குச் சென்றபோது அங்கு எவரும் இருப்பதாகத் தெரியவில்லை. அவன் வாயிலில் நின்று எட்டிப் பார்த்தான். தங்குமிடத்தின் ஒருமுனைக்குச் சென்ற போது பின்பக்கமாக யாரோ இருப்பது போல் தெரிந்தது.

"சின்ன சுவாமி....."

"யாரது?"

வெளியே வராமல் சின்னபிக்கு கேட்டார்.

"சின்ன சாமி நான் தயாசேன"

"ஆ..... தயாசேன உள்ள வாங்க. என்ன இன்றைக்கு புது ஆள் மாதிரி"

"சின்ன சாமிக்கொரு ரகசியம் சொல்லணும்"

"என்ன.... இவ்விடத்தில் சொல்ல முடியாத ரகசியமா?"

''நாங்கள் தர்மசாலைக்குச் செல்வோம்''

தோளிலிருந்து சரிந்துவிழும் காவியுடையை உயர்த்தி ஒழுங்குபடுத்தியபடி சின்னபிக்கு, தயாசேனவுடன் கீழே வந்தார்.

தர்மசாலைக் கதிரையொன்றில் அமர்ந்து கொண்ட சின்னபிக்கு தயாசேன சொல்வதைக் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தார்.

''நான் சின்னபிக்குவிற்கு இதுபற்றி முன்பும் சொல்லியிருக்கேன் அல்லவா?''

''ஓம்''

''இதை எப்படி பெரிய சாமியிடம் சொல்வது?''

''தயாசேனவுக்குச் சொல்ல முடியாதா?''

''ஐயோ எனக்கென்றால் சொல்ல முடியாது சாமி''

''அப்படியென்றால் நானே சொல்றன். ஆனால் தயாசேனவும் வர வேணும். டீச்சர் மாமி பற்றி என்னைவிட உங்களுக்கல்லவா தெரியும்''

''ஆ சரி''

சின்ன பிக்கு தயாசேனவுடன் அவர்களது வாசஸ்தலத்தில் பெரிய சாமிக்கு ஒதுக்கப்பட்ட பகுதிக்குச் சென்றனர். அப்போது அவர் கண்களைச் சற்று மூடியபடி அமைதியாக சாய்கதிரையில் வீற்றிருந்தார்.

சின்னசாமி தொண்டையைச் செருமினார். பெரியசாமி கண்களைத் திறந்து பார்த்தார்.

''என்ன சின்னவர்''

சின்ன சாமியும் தயாசேனவும் பெரிய பிக்குவை வணங்கி எழுந்தனர்.

''பெரிய சாமி..... தயாசேனவின் டீச்சர் மாமிக்குச் சுகமில்லாமல்......''

''ஓம் கேள்விப்பட்டன். மற்றது எங்கள் விகாரையில் முகாமொன்று நடாத்த வருவதாக அறிவித்துள்ளார்கள்''

''அடுத்த வாரம் சனிக்கிழமை.... நான் சொல்லமறந்தன். அந்தக்

கடிதத்தை பார்த்தால் நல்லது சின்னவர். இன்று ஞாயிறு. இன்னும் ஆறு நாள் தானிருக்கு''

சின்னசாமி கடிதத்தோடு வெளியே வந்தார். அது ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தால் அனுப்பப்பட்டிருந்தது. நடக்க இருக்கும் முகாம் பற்றிய விபரங்களை உள்ளடக்கியது.

''மாமியைக் கூட்டிவர தயாசேனவுக்கு முடியும்தானே?''

''மாமி அப்படி வரமாட்டார் பெரிய சுவாமி''

''நோயாளருக்கு பரிகாரம் செய்வதாக அவர்களிடம் சொல்வதில்லை. இங்கு வருகை தரும் சுவாமி, அவர்களது பிரச்சினைகள் பற்றிக் கதைப்பது மாத்திரம் தான். அதன் பின்னர் டாக்டர்மார் அதுபற்றி முடிவெடுப்பார்கள்''

''என்ன டீச்சர் மாமி வீட்டில் குழப்பம் செய்றாவா?''

''அப்படித்தான் பெரிய சுவாமி''

''அப்படிப்பட்டவர்களுக்கு நிறைய அன்பும் ஆதரவும் தேவை. அது குறையும் போது முரண்படுவார்கள்''

''ஓமோம்''

''எனக்கு இன்று மாலை வக்வல்லை விகாரைக்கு போக வேண்டியிருக்கு. அங்கு போகும் போது கொஞ்சம் ஏதாவது கதைக்கலாம் தானே?''

சின்னசாமியோடு தயாசேன கீழே வந்தான்.

''நான் போய் வாரன் சின்னசாமி''

''டீச்சர் மாமிக்கு சுகம் கிடைத்தால் உங்களுக்கெல்லாம் நல்லது. எங்களுக்கும் நல்லது. ஊருக்கும் நல்லது''

✧✧✧✧✧✧✧✧✧✧✧

பெரிய சுவாமியார் வாகனங்களில் பயணம் செய்ய விரும்புவதில்லை. காலி, பத்தேகம், ஹிக்கடுவ இப்படி எங்கு சென்றாலும் நடந்தேதான் செல்வார்.

ஹல்லலையிலிருந்து பெரு வீதிக்கிறங்கிய பெரிய சாமி வக்வல்லை விகாரைக்குச் செல்லும் எண்ணத்துடன் தடம் தொடர்ந்தார்.

ஹல்லலைக்கு வந்தடைந்தபோது சுற்றுவட்ட வீட்டு சிறுபிள்ளைகள் சுவாமியின் பாதங்களைத் தொட்டு வணங்க முட்டி மோதினர். அதை சகித்துக் கொண்டபடி, "சௌபாக்கியம் கிடைக்கட்டும்" என்று ஒவ்வொரு பிள்ளையாக ஆசீர்வதித்தார்.

எண்பத்தைந்து வயதிலும் சுயமாகப் பயணிக்கும் சுவாமியார் சாந்த மான புன்னகை சிந்துபவர். ஜீவத் துடிப்பு மிகுந்த உடலும் கண்களும் உத்தமமான தோற்றமும் எவரையும் அமைதிப்படுத்தத்தக்கவை.

பெரும் பாதைக்கிறங்கிய பெரிய சுவாமிக்கு யாரோ சண்டை பிடிக்கும் சத்தம், தயாசேனவின் வீட்டுக்குப் பக்கமிருந்து கேட்டது.

டீச்சர் மாமி அப்போதும் யசவதி மாமியின் மகன் சமரஸேனவுக்கு திட்டிக் கொண்டிருந்தார். அப்போது தொலைவில் காவியுடையைக் கண் டார் போலும், திட்டுவதை நிறுத்திவிட்டு உடனடியாகவே வீட்டுக்கு வந்து விட்டார். பெரிய சாமி எதுவுமே தெரியாததுபோல் முன்னோக்கி வந்தார்.

தயாசேனவின் வீட்டு முன்பாக சற்று நேரம் நின்ற பெரிய சுவாமி, வெளியே எவரும் இல்லாததல் தொண்டையைச் செருமினார்.

பெரிய சுவாமி முற்றத்தில் நிற்பதைக் கண்ணுற்ற கமலா, வெண்விரிப்பு எடுப்பதற்காக உள்ளே ஓடினாள்.

"டீச்சரக்கா பெரிய சுவாமி வந்திருக்கார்"

கதிரையில் வெண்பிடவை விரித்த கமலா, "அமருங்கள்...... பெரிய சுவாமி....... அமருங்கள்" என்று வேண்டி நின்றாள்.

வீட்டுக்கேறிய பெரிய சுவாமி கதிரையில் அமரும் போதே, அவருக்கு வணங்குவதற்காக டீச்சர் மாமி வெளியே வந்தார்.

"அனுமதி தாருங்கள் எங்கள் பெரிய சுவாமி"

"சௌபாக்கியம் கிட்டட்டும்"

"விகாரைப் பக்கம் வருவீர்களென்று எதிர்பார்த்தோம். டீச்சர் மாமி வீட்டுக்கு வந்துள்ளதாக தயாசேன அடிக்கடி சொல்வான்"

"மனதில் அமைதி இருக்கவில்லை அந்தப் பக்கம் வருவதற்கு சுவாமி"

''மனதில் அமைதி இல்லாவிட்டால் தானே விகாரைப் பக்கம் வரவேண்டும். புத்த பெருமானின் நிழல், அமைதியான சுற்றுச் சூழல் எல்லாம் மனதை ஒரு நிலைப்படுத்துமல்லவா டீச்சர்''

''உண்மைதான் பெரிய சுவாமி''

''எங்கள் விகாரைக்கு கொழும்பிலிருந்து பெரியவர்கள் வருகிறார்கள். பல்கலைக் கழக தேரர் ஒருவர், டாக்டர்கள் இப்படி. தங்களது பிரச்சினைகளையிட்டு அவர்களோடு கதைக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறார்கள்''

''அது நல்ல விஷயம் சுவாமி''

''நான் வக்வல்லை பிரதம சுவாமிக்கு அழைப்பு விடுக்கத்தான் போகிறன். உண்மையிலே நீங்களும் அந்த சபைக்கு வந்தால் ஒரு பெரும் குறைபாடு மறைந்துவிடும். ஏனென்றால் உலக விஷயங்களை அறிந்து தெரிந்தவர்கள் இருந்தால் தானே ஏதாவது கேள்வி எழுப்ப முடியும்''

''நல்லது பெரிய சுவாமி..... நானும் வர முயற்சிக்கிறன்''

''தயாசேனவுடன் வரமுடியுமல்லவா? பாடசாலை அதிபருக்கும் அறிவித்திருக்கிறோம். அவரும் வருவார்''

''நல்லது''

''சரி நான் வாரன்''

எழுந்து நின்ற பெரிய சுவாமியை டீச்சர் மாமி மீண்டுமொரு முறை வணங்கினார்.

''சின்னவள் இங்க வா''

கமலா வணங்கியபடி மகளையும் அழைத்தாள்.

பெரிய பிக்கு வீட்டுக்கு வந்துள்ளதை அறிந்து சமையலறைப் பக்கமாக உள்ளே புகுந்து எல்லாம் கேட்டுக் கொண்டிருந்தான். தயாசேனவுக்கு பெருமையாகவிருந்தது. ஒருவித வெற்றியுணர்வு மனதிலே பரவியது.

# 9



"அண்ணா..... நீ அறநெறிப் பாடசாலைக்கு ஏன் வரவில்லையென்று தனவதி மிஸ் கேட்டவ"

"தம்பி என்ன சொன்னாய்?"

"வரும் போது அண்ணா வீட்டிலில்லை என்று சொன்னேன்"

"அதற்கு?"

"பகிடி விட்டார்.... வீட்டிலிருப்பவர்களைக் கள்ளன் தூக்கிச் சென்றாலும் இவனுக்குத் தெரியாதென்பான்...."

"அண்ணன் வந்திருந்தால் நல்லது. இன்று கூட்டம் நடந்தது. அப்புமாமா பரிசு வாங்க வந்திருந்தார். அவரைப் பாடச் சொல்லி தலைவர் கேட்டார். அப்புமாமா பாட்டுப் பாடினார்"

"தம்பிக்கு அந்தப் பாட்டு ஞாபகமில்லயா?"

"எனக்கு கொஞ்சம் ஞாபகமிருக்கு. வந்திருந்த பிள்ளைகளெல்லாம் சிரிச்சவங்கள். பெரிய சுவாமியும் ஒதுக்குப் புறமாக நின்று கேட்டுக் கொண்டிருந்தார்"

"தன்னானெ தன தன தன்னானே னா

பலாக்காய் அவியல் நான் விரும்பியுண்டேன்
என் சுருங்கிய வயிறு காற்பந்தாய்ப் போச்சு.....

தன்னானெ தன தன தன்னானே னா

சிறுவர்களே என்னிடத்தில் இணங்கி வாருங்கள்
துடிப்பான சிறுவர்களை பிடித்துத் தாருங்கள்
பிடித்துத் தாருங்கள்
பிடித்துத் தாருங்கள்''

தயாசேன குசினிக்குச் சென்றான். அம்மா இரவுச் சாப்பாடு தயார் செய்து கொண்டிருந்தாள்.

''அம்மா?''

''என்ன?''

''பெரிய சுாமி வந்தபிறகு டீச்சர் மாமி சத்தம் போடவில்லையென்ன?''

''ஓம்.... இப்போ அறைக்குள் புத்தகம் வாசித்துக் கொண்டிருக்கிறா''

''அம்மா எங்களுக்குக் கிடைத்த பரிசை டீச்சர் மாமிக்கு கொடுப்போமா?''

''நல்லது கொடுத்து வணங்கு''

டீச்சர் மாமி இரவுச் சாப்பாட்டுக்கு அறையிலிருந்து வெளியே வந்தார். சாப்பிட்ட பின் வாசல் சாய்கதிரையில் அமர்ந்தார். நீண்ட நாட்களுக்குப் பின்பு தான் அவ்வாறு செய்தார். சுனிலும் செவ்வந்தியும் டீச்சர் மாமிக்கு மறைந்து மறைந்துதான் நடமாடினர்.

தயாசேன பரிசுப் பொதியை இரண்டு கைளாலும் டீச்சர் மாமியிடம் கொடுத்தான்.

''என்ன இது தயாசேன?''

''மாமிக்கு சின்னதொரு பரிசு''

விரல் நுனிகளால் பொதியை சற்றி விலக்கிப் பார்த்தபோது உள்ளே இருப்பது வெள்ளைப் பிடவையென்பது தெரியவந்தது.

''எனக்கு என்னத்துக்கு தயாசேன?''

''ஆ...... அக்கா அது பிள்ளைகள் சந்தோசமாகத் தாரதல்லவா?''

டீச்சர் மாமி பரிசை நிராகரித்துவிட சற்று பின்வாங்கினார்.

''இந்தப் பிள்ளைகளுக்குத் தானே இது தேவைப்படும்''

''இல்லை அவங்களுக்கு அப்பா கொண்டு வந்த பிடவை இருக்கு''

கமலா மீண்டும் பங்கு கொண்டாள்.

''ஓம் சந்தோஷமாகத் தருவதல்லவா?''

தயாசேன, டீச்சர் மாமியின் முன் வளைந்து நின்று வணங்கினான். சுனிலும் செவ்வந்தியும் அவ்வாறே செய்தனர்.

''புண்ணியம் கிடைக்கட்டும் மும்மணிகளின் துணை''

திங்களன்று பாடசாலை சென்று வந்த தயாசேன அறையிலே தனது புத்தகங்களை வைத்தான். சேட்டைக் கழற்றியபடி அம்மாவைத் தேடிக் கொண்டு பின்பக்கமாகச் சென்றான்.

''அம்மா..... ஆங்கில பாட மாதாந்தப் பரீட்சையில் மூன்று வகுப்பிலும் எனக்குத் தான் கூடிய புள்ளி''

''ம் எனக்கும் கூடின புள்ளிதான்''

சுனிலும் பின்பக்கமாகவந்து சொன்னான்.

''இது டீச்சர் மாமியால் தானே''

டீச்சர் மாமி அறையிலிருந்து வெளியே வந்தார்.

''எங்க பேப்பரப் பார்ப்பம்''

கேள்விகளையும் எழுதப்பட்டுள்ள விடைகளையும ஒவ்வொன்றாக வாசித்துப் பார்த்தார்.

''இந்த ரெண்டு புள்ளி குறைந்தது தெரியாமல் அல்ல. நான் சொல்லித் தந்திருக்கிறன். வோன்ட் என்ற சொல்லின் பாஸ்டென்ஸ் வோன்டட் என்று......''

''அவளுக்கு ஒரு பனிஸ் வாங்கத் தேவைப்பட்டது. ம் இப்ப சொல்ல முடியுமா தயாசேன?''

''சீ வோன்டட் பை எ பன்''

''ஓகே தட்ஸ் ரைட்''

✧✧✧✧✧✧✧✧✧✧✧✧

''தயாசேன பள்ளிக்கூடம் விட்டு வரும் போது திரீவீலர் ஒன்றில் ஏறி வாங்க. அப்படியே எனக்கு கந்தோருக்குப் போயிட்டு வரலாம்''

பள்ளிகூடம் செல்வதற்கு முன் டீச்சர் மாமி ஞாபகமூட்டினார்.

பள்ளிக்கூடம் விட்டு விகாரைக் காணிக்கூடாக பாதைக்கிறங்கும் போது, குணசிரி அண்ணாவின் திரீவீலர் கூட்டுறவுக்கடையருகே நிற்பதை தயாசே கண்டான்.

''தம்பி திரீவீலரில் போகலாம்''

அண்ணனும் தம்பியும் திரீவீலரில் ஏறினர்.

''போத்தலைக்குப் போக திரீவீலர் கொண்டு வரச் சொன்னா டீச்சர் மாமி''

''ஆ போவம்''

குணசிரி அண்ணன் ஸ்டாட் செய்தார். ஹல்லலை போகும் பாதையில் அது செல்வது தயாசேனவுக்கு தெரிந்தது.

''அண்ணா கொஞ்சம் நிறுத்துங்க, வஸந்த ஏறு ஏறு''

வஸந்த ஏறும் போதே காமினியும் ஏறிக் கொண்டான்.

''குணசிரி அண்ணா கொஞ்சம் கொஞ்சம்.....''

தனது நண்பன் நாணயக்காரவை சுனில் கண்டான்.

''நாணா ஏறு ஏறு''

''ஏற்றிக் கொள்ள இன்னும இருக்கிறார்களா?'' குணசிரி அண்ணா சிரித்துக் கொண்டே கேட்டார்.

''அந்த ரெண்டு பேரையும் போட்டுக் கொள்வோமா?''

''எனக்கென்ன எனக்கு கூலி கிடைக்கும் தானே''

இப்போதைக்கு திரீவீலரின் பின் ஆசனத்தில் ஆறுபேர்.

நண்பர்கள் ஆங்காங்கே இறக்கிவிட்டு மிகுந்த மகிழ்ச்சியுடன் தான் இருவரும் வீட்டுக்கு வந்தனர். சுனில் வாகனத்திலிருந்து இறங்கிய போது தயாசேன தனது புத்தகக் கட்டைத் தம்பியிடம் கொடுத்தான்.

ஓய்வூதியம் எடுக்கச் சென்ற டீச்சர் மாமி தயாசேனவுடன் மீண்டும் வந்து கொண்டிருந்தார்.

கூட்டுறவுக் கடையருகே வரும்போது.....

''கொஞ்சம் நிறுத்து தம்பி, எனக்கு மா டின்னொன்று எடுக்க வேணும்''- என்றார் டீச்சர் மாமி.

மாப்பேணி எடுத்து வரும் வரையில் தயாசேன திரிவீலருக்குள்ளேயே இருந்தான்.

மாமி மீண்டும் ஏறியபோது திரிவீலர் வேகமாக ஓடத் தொடங்கியது.

வீட்டின் முன்னால் திரீவீலர் நிறுத்தப்பட்டது. டீச்சர் மாமி கைப்பை யைத் திறந்தார். அதற்குள் எதையோ மிகக் கவனமாகத் தேடுவது தெரிந் தது. கொஞ்சநேரம் திகைத்துப்போய் நின்றார்.

''என்னுடைய பேர்ஸை காணவில்லயே தயாசேன''

''மாமி மாவுக்கு காசு கொடுத்தீங்கதானே?''

''ஓம்''

''இருங்க தம்பி காசு தாரன். என்ன செய்ய?'' வீட்டுக்குள் சென்ற டீச்சர் மாமி சொன்னார்.

''சரி நான் போறன் டீச்சர்''

காசெடுக்காமலேயே குணசிரி அண்ணன் திரீவீலரை ஸ்டாட் பண்ணி னார்.

மீண்டும வெலிவத்தை செல்ல அவர் வாகனத்தைத் திருப்பியது மாத்திரம்தான். ஜினபால வேகமாக தனது சைக்கிளை மிதித்துக் கொண்டு வருவதை தயாசேன கண்டான்.

சைக்கிளிலிருந்து இறங்கிய ஜினபால களைப்பாறத் தொடங்கினான்.

"இந்தாங்க மிஸ்ஸுடைய பேர்ஸ். நான் கூட்டுறவுக் கடையருகில் கண்டெடுத்தேன். மிஸ் தயாசேனவுடன் இந்தப் பக்கம் வருவதைக் கண்டேன்"

"தேங்யூ தம்பி..... தேங்யூ..... இந்தாங்க என்ற பரிசு"

"வேணாம் மிஸ் வேணாம்"

அவன் அதை எடுக்கவேயில்லை.

"இந்தாங்க உங்கட கணக்கு"


அவர் குணசிரி அண்ணனுக்கு பயணக் கூலியைக் கொடுத்தார்.

"ஜினே சைக்கிளை திரீவீலருக்குள் போடு"

தயாசேனவின் உதவியோடு ஜினபால தனது சைக்கிளை குணசிரி அண்ணனின் திரீவீலரில் ஏற்றிக் கொண்டான்.

அவர்கள் மறையும் வரை டீச்சர் மாமி அன்புணர்வோடு பார்த்துக் கொண்டிருந்தார்.

# 10



தயாசேனவும் டீச்சர் மாமியும் தர்மசாலையை நெருங்கும் போது அவர்களை வரவேற்குமாப் போல் சிறிவர்தன ஸேர் பாதைக்கிறங்கினார்.

''வாருங்கள் மிஸ்''

''இது மிஸ்டர் சிறிவர்தன அல்லவா?''

''ஓம் மாமி''

தயாசேன பதில் சொன்னான்.

''தயாசேன அடிக்கடி, தங்கள் மாமியைப் பற்றிச் சொல்வான்''

''அதேபோலத் தான் மிஸ்டர் சிறிவர்தனவின் நல்லதன்மைகளையும் சொல்வான்''

''இப்பொழுதுதான் தேரர் ஒருவரும் டாக்டர்மாரும் வந்தவங்க''

''ஆ சரி மண்டபத்துக்குப் போவம்''

''அந்த முன்வரிசைக் கதிரையில் அமருங்கள். இதோ இருக்கிறார் எங்கள் பிரின்ஸிபல்''

''இல்லை நான் இங்கேயே இருந்து கொள்ளுறன்''

''மிஸ் இந்தக் கதிரைகள் எங்கள் பிரின்ஸிபலுக்கும், பொலிஸ் ஓ. ஐ. ஸி அவர்களுக்கும், வல்பிட தோட்ட சுப்ரின்டனுக்கும், மிஸ்ஸுக்கும் தான்''

டீச்சர் மாமியை கௌரவமாக வரவேற்று அமரச் செய்ததையிட்டு தயாசேனவுக்கும் சுனிலுக்கும் பெருமையாகவிருந்தது.

அதுபோக, டீச்சர் மாமி அதிபருக்குப் பக்கத்திலேயே அமர்ந்தமை அவர்களை இன்னுமொருபடி மகிழ்ச்சிப்படுத்தியது.

ஊர்வலத்திற்கு முன்தினம் தர்மசாலை பௌத்த கொடியில் காணப் படும் வர்ணங்களுக்கேற்ப அலங்கரிக்கப்பட்டது. இந்த வைபவத்திற்கும் அது புதுமெரு கூட்டியது.

விரிவுரையாளர் வெலிகம குணாநந்த தேரர் தான் முதன் முதலில் தர்மசாலைக்கு வருகை தந்தார். விசேட வைத்தியர் குலசேகர, மற்று மொரு விசேட வைத்தியர் அமரசேகர, மனோவியல் தொடர்பான விரிவு ரையாளரர் திலக்ஷனி மான்னப்பெரும ஆகியோரும் தொடர்ந்து வந்தனர்.

வக்வல்லை விகாராதிபதி பஞ்சசீலம் சொல்லி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். அடுத்து விகாரை சார்பிலும் ஊரவர் சார்பிலும் அதிதிகளை சின்னபிக்கு வரவேற்றுப் பேசினார். கூடவே குணாநந்த தேரர் பற்றியும் வருகை தந்துள்ள டாக்டர்களின் திறமை பற்றியும் சபையோர்க்கு எடுத்துக் கூறினார். விரிவுரையாளர் திலக்ஷினி மான்னப்பெரும வானொலி, தொலைக்காட்சி கலந்துரையாடல்களில் பங்கு கொள்வது மட்டுமன்றி, கிராமம் கிராமமாகச் சென்று செயலமர்வு செய்து அனுபவப்பட்டவரென் பதையும் விபரித்தார்.

''சுவாமி முதலில் பேசுங்கள்''

டாக்டர் அமர சேகரா அவர் சுவாமிக்கு அழைப்பு விடுத்தார்.

''இல்லை கேள்வி கேட்டால் நான் பதில் சொல்றன். நீங்கள் ஆரம்பியுங்கள்''

அதன்படி டாக்டர் அமரசேகரா எழுந்து நின்றார்.

''உங்களுக்குத் தெரியும் இங்கே வெலிகம குணாநந்த தேரர் வருகை

தந்துள்ளார். அவ்வாறே டாக்டர்கள் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் வருகை தந்துள்ளார்கள்.....

"வாழ்க்கையில் எங்களுக்கு பல்வேறு பிரச்சினைகள் ஏற்படும். அது இயல்பானது. பிரச்சினைகள், சிக்கல்கள் இல்லாவிட்டால் அது இயல்பான வாழ்க்கையல்ல....

"எமது அதிகமான டாக்டர்கள் பிரச்சினையைப் பிழையான விதத்தில் பெயரிடுகிறார்கள். அவர்கள் 'நோய்' என்று சொல்லையே பயன்படுத்து கிறார்கள். அந்தச் சொல்லை நான் முற்றாக நிராகரிக்கிறேன். அதனை 'பிரச்சினை' என்றே நான் பாவிக்கிறேன்......

"நான் நினைக்கிறேன் இங்கே அதிகமானவர்கள் அல்லது அனைவ ரும் பௌத்தர்கள். எப்படியும் அதுவொரு பிரச்சினையல்ல. சமயக் கண் ணோட்டத்தில் எமது சிக்கல்களுக்கு விடைதேடுவதற்கு எங்கள் குணா நந்த தேரர் இருக்கிறார்......

"இனி பிரச்சினைகள், சிக்கல்கள் தொடர்பாக எவரும் கதைக்க முடியும். தயவு செய்து பொருளாதாரப் பிரச்சினைகளை மறந்து விடுங்கள். உடல் ரீதியான உளரீதியான பிரச்சினையிட்டு கதைக்கலாம்.......

"நல்லது தானே சுவாமி......."

"ஓம் அப்படியே செய்வோம்"

"இப்பொழுது தத்தமது பிரச்சினைகளை முடிந்த வகையில் சொல்லுங்கள். டாக்டர்மாரும் தேரரும் அதுபற்றி உங்களோடு உரை யாடுவார்கள்"

பெரிய பிக்கு அவ்வாறு சொன்ன போதும் மாறிமாறி முகங்களைப் பார்த்துக் கொண்டார்களே தவிர, எந்தப் பிரச்சினையும் வெளிப்பட வில்லை.

மூச்சுக் காற்றை உள்ளீர்க்கும் ஒலி கேட்குமளவுக்கு நிசப்தம்.

அந்தக் குறையை நிவர்த்தி செய்வது போல் டீச்சர் மாமி எழுந்தார்.

"எனக்கும் கதைப்பதற்கு பல சிக்கல்கள் உண்டு. வேறெவரும் முன்வராததால் தான் நான் முதலில் எழுந்தேன்"

அதன் பிறகு அவர் ஆங்கிலத்திலேயே கதைத்தார். அதனை ஓரிருவரால் மாத்திரமே புரிந்து கொள்ள முடிந்தது. தயாசேனவுக்கு டீச்சர் மாமியின் கெட்டித்தனத்தையிட்டு மகிழ்ச்சியேற்பட்டுது மாத்திரமன்றி, அவர் மீது கௌரவமான உணர்வும் மேலிட்டது.

அதன் பிற்பாடு குணாநந்த தேரர் பேசினார்.

''அடுத்தவர் கேள்வி எழுப்பாவிட்டாலும் இந்த அம்மையாரின் பிரச்சினை எல்லோருக்கும் பொதுவானதே......

''எங்களுக்கு யாருமில்லை என்பதே பிரச்சினையாகவுள்ளது. பௌத்த தர்மத்தின்படி பார்க்கும் போது உண்மையில் எங்களுக்கு யாருமில்லை-தான். தற்காலிகமான உறவையும் நட்பையுமே வைத்திருக்கிறோம். உண்மையைச் சொல்வதானால், மற்றவர்களல்ல...... எங்களுக்கு நாங்களே இல்லை. எங்களது வயது போவதை, பல் விழுவதையோ, தோல் சுருங்குவதையோ எங்களால் தடுக்க இயலுமா?''

இந்தப் பேச்சின் பின்னர் எதையோ புரிந்து கொண்டது போல் டீச்சர் மாமி தலையாட்டினார்.

''நான் நினைக்கிறேன் இது விடயமாக ஜயசேகர அம்மையாரால் நிறைய வேலை செய்யலாம். உங்களது பரந்த ஆங்கில அறிவை இப்பகுதி பிள்ளைகளுக்கு வழங்கி உதவுங்கள். விசேடமாக இவர்கள் கிராமத்துப் பிள்ளைகள். செய் நன்றி பேணுவதில் நகர்ப் புறப் பிள்ளைகளைவிட இவர்கள் உச்சத்திலிருக்கிறார்கள்...........

''கிராம மக்களுக்கு தலைமை தாங்கி வழி நடாத்தக் கூடியவர் நீங்கள். இலங்கையின் பல பிரதேசங்களில் மட்டுமல்ல, பிற்காலத்தில் தலைநகரின் பிரபல பாடசாலையொன்றில் ஆசிரியையாகக் கடமையாற்றி நிறைந்த அனுபவமுள்ளவரும் கூட, உங்களது பிரச்சினைகளுக்கு வேறு தீர்வுகள் தேவையில்லை''

இன்னும் பலர் தத்தமது பிரச்சினைகளையிட்டு கலந்துரையாடினர்.

டீச்சர் மாமி வந்திருந்த டாக்டர்களுடனும் அதிபர், பொலிஸ் நிலையப் பொறுப்பாளர் போன்றோருடனும் கதைத்தார்.

பெண்களும் இளம் யுவதிகளும் தர்மசாலை வாயிலருகில் டீச்சர் மாமியை சந்திப்பதற்காக குழுமியிருப்பது தயாசேனவுக்குத் தெரிந்தது.

"நாங்கள் மிஸ் வரும் வரையிலிருந்தோம்"

அறநெறிப் பாடசாலை ஆசிரியை குணவதி சொன்னாள்.

"ஏன்?"

என்றுமில்லாத இனிய புன்னகையோடு தான் டீச்சர் மாமி கேட்டார்.

"ஐயோ மிஸ் அடுத்த சனிக்கிழமை மாலை மூன்று மணிக்கு பெண்கள் சங்கத்தின் வருடாந்தக் கூட்டம். நீங்கள் கட்டாயம் வரவேணும். நாங்கள் உங்களை அழைத்துச் செல்ல வருவோம்"

பலதரப்பட்ட வயதுப் பெண்கள் அவரைச் சுற்றி வளைத்துக் கொண்டு பல்வேறு விதமான கேள்வியெழுப்பிக் கொண்டிருந்தனர்.

திரும்பிப் போகும் வழியில் சந்தித்த எல்லோரும் போல் டீச்சர் மாமியோடு அன்போடு சிரித்துச் சென்றனர்.

# 11



டீச்சர் மாமியை விகாரைக்கு அழைத்துச் செல்ல குணவதி ஆசிரியை வந்திருந்தார். கூடவே இன்னும் பல இளம் பெண்கள்.

வெள்ளை சாரி அணிந்த டீச்சரக்காவை சுற்றி வளைத்துக் கொண்டு நீண்ட பாதை வழியே இளம் பெண்கள் செல்வதை என்றுமில்லாத மகிழ்ச்சியோடு அவதானித்துக் கொண்டிருந்தாள் கமலா.

''அந்த டீச்சர எங்க கூட்டிப் போறாங்க?''

யசவதி மாமி கமலாவிடம் கேட்டாள்.

''பெண்கள் சங்கத்தின் வருடாந்தக் கூட்டம் இன்றைக்கு இருக்காம். அதற்கு வரச் சொல்லி பெரிய கரைச்சல்''

கூட்டம் மாலை மூன்று மணிக்கே நடக்கவிருந்தது. டீச்சர் மாமி இரண்டரைக்கே சென்ற போதும் நிறையப் பேர் அங்கே கூடியிருந்தார்கள்.

''நாங்கள் மிஸ் வரும்வரையில் வழி பார்த்திருந்தோம்''

''மிஸ் வந்தது எவ்வளவு சந்தோஷம் தெரியுமா?''

''எங்க பிள்ளைகளுக்கு தெரியாத விஷயங்களை கேட்டுக் கொள்ள இப்போ ஒருவர் இருக்கிறா''

இப்படியான அபிப்பிராயங்களைப் பலரும் வெளிப்படுத்தினர். அவர்கள் எல்லோருக்குமே அமைதியாகவும் மகிழ்ச்சியோடும் பதில் சொன்னார். குறைந்தபட்சம் சிரிக்கவாவது செய்தார்.

'விகாரமகா தேவி பெண்கள் சங்க'த்தின் புதிய செயற்குழு தெரிவு செய்யும் வேளை அது.

அங்கு எழுந்து நின்ற குணவதி மிஸ் "இந்தப் பகுதிக்கு சில மாதங்க ளுக்கு முன்பு வருகை தந்துள்ள சிறந்த அறிவும் வேலை செய்யும் திறமை யும் கொண்ட ஜயசேகர அம்மையாரை எங்கள் சங்கத்தின் தலைவியாக தெரிவு செய்து கொள்ளுமாறு நான் பிரேரிக்கிறேன்"- என்றார்.

செல்வி குசுமலதா நாணாயக்கார அந்தப் பிரேரணையை ஆமோதித் தார். வேறு பிரேரணைகள் இல்லாததால், டீச்சர் மாமி சங்கத்தின் தலை வியாகப் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டார்.

சபையிலிருந்து கைதட்டல் எதிரொலித்தது. அது தனக்காக எழுந்த கைதட்டலாக தயாசேன நினைத்தான்.

உத்தியோகத்தர் தெரிவைத் தொடர்ந்து, விசேட பிரேரணை வேளை யின் போது, ஊரில் பெரும் குறைபாடாகவிருக்கும் ஆங்கில வகுப்பொன்றை ஆரம்பிக்க நடவடிக்கையெடுக்க வேண்டுமென்று மத்தெ அண்ணனின் மனைவி முன்மொழிந்தார். அதை குணவதி மிஸ் வழி மொழிந்தார்.

"ம்...... இனி அந்த வேலை உங்களுக்குத் தான் பொறுப்பு"

மற்றவர்களுக்கும் கேட்க கூடிய விதமாக டீச்சர் மாமியிடம் குணவதி மிஸ் சொன்னார்.

"எனக்கு எந்நேரம் வெளிநாட்டுக்கு போகவேண்டி வருமோ தெரியவில்லை"

"ஐயோ மிஸ் நீங்கள் போகும் வரையில் செய்யுங்களேன்"

பின்வரிசையிலிருந்து அப்படிச் சொன்னது யாரென்று தெரியவில்லை.

"சரி நான் நேர காலம் கிடைக்கும் போது செய்றன்"

காதைப் பிளக்கும் கரகோஷம் எழுந்தது.

சபை நடவடிக்கைகள் முற்றுப் பெறும் போது பெரிய பிக்கு தர்மசாலைக்கு வந்தார்.

"எப்படி உங்கள் சிஷ்யகோடிகள்? நல்லவங்களா? டீச்சர்"

"அப்படித்தான் சுவாமி"

"இப்போ நீங்க என்ன செய்யணுமென்றா, பூவிலிருந்து தேனீக்கள் தேனெடுப்பது போல, டீச்சரைக் களைப்படையச் செய்யாமல், உங்கள் முன்னேற்றத்துக்கேற்றவகையில் ஒழுங்கு செய்து கொள்வதுதான்"

கூட்டம் முடிந்த பின் கிராமத்து இளம் பெண்களோடு தர்மசாலையில் அமர்ந்து, டீச்சர் மாமி கதைக்கத் தொடங்கினார்.

"நாங்கள் இங்கிலிஷ் கதைக்கப் படிக்கணும் மிஸ்"

"கதைக்கிற இங்கிலிஷ் என்று நான் அறிந்தவரையில் ஒரு இங்கிலிஷ் இல்லை. கதைக்கிற இங்கிலிஷ் எழுதிற இங்கிலிஷ் எல்லாம் ஒன்றுதான்"

டீச்சர் மாமி உரிய விளக்கமளித்தார்.

"மொழி படிக்கும் போது அந்த மொழிக்குரிய இலக்கணம், பிரயோக முறை, ஒழுங்கமைப்பு போன்ற விடயங்களைத் தெரிந்து கொள்ளணும். அடுத்தது நிறைய வாசிக்கணும். அதனால் வகுப்பு ஆரம்பிக்கும் முன்பு சிறிய நூல் நிலையமொன்றை அமைத்துக் கொள்ளணும்"

"ம்...... நாங்கள் கொஞ்சக் காசு சேகரிப்போம்"

"நான் ஒரு விஷயம் சொல்லட்டா?"

"சொல்லுங்கள்"

பலரது குரல் ஒன்றாய் எழுந்தது.

"உங்களுடைய வீடுகளில் முன்பு வாசித்து விட்டுத் தள்ளி வைத்த புத்தகங்கள் இருக்கும். நாவலாக இருக்கலாம். கவிதைப் புத்தகமாக இருக்கலாம். அடுத்த ஞாயிறு வரும்போது கொண்டுவாருங்கள்"

"ஓம்"

டீச்சர் மாமியின் குரல் அடுத்தவர்களது குரலை விட உயர்ந்து ஒலித்தது.

இரண்டு வாரங்களின் பின்பு சிறிய நூலகமொன்றைத் திறந்து வைக்க அவர்களால் முடிந்தது.

12



டீச்சர் மாமியின் இளைய தம்பி ஜயசேகர அவர்கள் இங்கிலாந்தில் வாழ்ந்து வந்தார். அவரது மனைவி சுசிலா ஜயசேகர விற்பனை நிலைய மொன்றில் வேலை செய்வதால் உதவிக்கு அவளது அக்கா ஒருத்தியை வீட்டுக்கு எடுத்திருந்தாள்.

ஆசிரிய சேவையிலிருந்து ஓய்வு பெற்ற தனது சகோதரியை வீட்டுக் கழைத்துக் கொள்ள ஜயசேகர விருப்பத்தோடிருந்த போதிலும், அவரது மனைவி அதற்கு உடன்படவில்லை.

''அவர் இங்கே வந்தால் எனக்கு சண்டை பிடிப்பதைத் தவிர, வேறு வேலை இருக்காது''

ஜயசேகர அவர்கள் தன் சகோதரியை அழைத்துக் கொள்ள முயற்சித்த போதெல்லாம் சுசிலா இதே கதையைத்தான் சொன்னாள்.

அப்படியும் இப்புடியுமாக ஜயசேகரவின் வீட்டுக்கு இலங்கையிலிருந்து சுசீலாவின் அக்காவே கையுதவிக்கு வந்திருந்தாள். அவள் வந்து சேர்ந்து ஒரு ஆண்டுக்குள்ளேயே நோய் வாய்ப்பட்டுவிட்டாள்.

''இப்படி நோயில் விழுந்துள்ள அக்காவை எப்படி இலங்கைக்கு அனுப்பு

வது? இங்குபோல் அங்கே வைத்திய வசதிகளுண்டா? உற்றார் உறவினர்கள் சும்மா இருப்பார்களா? ம்.... இலங்கைக்கே போகமுடியாமல் போய்விடும்''

அக்காவை இலங்கைக்கு அனுப்பும் விடயத்தில் சுசீலா கடும் எதிர்ப்புக் காட்டினாள்.

''இது சரியானதொரு பிரச்சினை. அக்காவைப் பார்க்க சம்பளம் கொடுத்து ஆள் வைக்க முடியாது. நான் வீட்டில் நிற்கவும் முடியாது. என்ன செய்யலாம் ஐயே?''

சுசீலா பதில் கிட்டும்வரை தனது கணவனின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

''இப்பொழுது அக்கா இருக்குமிடத்து முகவரியாவது எனக்குத் தெரியாது''

''நல்லது நான் அதைத் தேடித் தருகிறேன். நீங்கள் ஒரு கடிதம் எழுதுங்களன்''

சுசீலா கொழும்பில் திரேசா அம்மையாருடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டாள்.

''ஹலோ மிஸிஸ் திரேசாவா? ஆ நான் சுசீலா''

''நீண்ட காலத்துக்குப் பிறகு. எப்படி சுகம் சுவாத்தியம்?''

''பிழையில்லை''

''பிள்ளைகள் இருவரும்''

''இரண்டு பேரும் இன்னும் ஸ்கூல் போறாங்கள். கடுமையான வேலை மிஸிஸ் திரேசா. அதுதான் கோல் கூட எடுக்க முடியல்ல''

''திரேசா அன்ரி கதைக்கிறாவென்று மகனுக்கும் மகளுக்கும் சொல்லுங்கோ''

''சொறி..... அவங்கள் இப்போ வீட்டிலில்லை. இருவரும் டான்ஸிங்க கிளாஸ் போயிட்டாங்க''

''இனி''

"ம்.... ஜயேயின் அக்கா இப்பொழுது எங்கே இருக்கிறாவென்று தெரிந்து கொள்ளத்தான் எடுத்தன்"

"கொஞ்சம் லைன்ல இருங்கோ"

திசேரா அம்மையார், அண்மையில் டீச்சர் மாமி அனுப்பிய கடிதத்தை தேடியெடுத்தார்.

"ஆ...... எழுதிக் கொள்ளுங்கள். ஸதநெளும், மஸ்ஸல, போத்தல. என்ன மிஸ்ஸை அங்கே அழைக்கப் போறீங்களா?"

"ஓம் மிஸிஸ் திசேரா. என்ற அக்கா கடுமையாக நோய்வாய்ப்பட்டிருக் கிறா. அவருக்கு சாப்பாடும் மருந்தும் கொடுத்துக் கொண்டிருந்தால் என க்கு வேலைக்குப் போகக் கிடைக்காது. இங்கிருந்து ஒருவரை வேலைக் கெடுக்கவும் எங்களுக்குப் பலமில்லை. அதனால் அவரது அக்காவை இங்கே வரச் செய்தால் பிரச்சினை தீர்ந்து விடும். இதை அவருக்குச் சொல்லத் தேவையில்லை. அப்படியென்றால் நான் வைக்கிறன்..... செரியோ......."

"செரியோ"

ஜெயசேகர அவர்கள் அக்காவுக்குக்கொரு கடிதம் எழுதினார்.

எனதன்பு அக்கா,

நீங்கள் இலங்கையில் தனித்து காலம் கடத்துவது எங்களுக்கு விருப்பமானதல்ல. நீங்கள் எங்களோடு இங்கிருந்தால் உங்களுக்கு தனிமையோ பொருளாதாரப் பிரச்சினையோ ஏற்படாது.

நாங்கள் ஆயிரக்க கணக்கான மைல் இடைவெளியில் இருக்க வேண்டியதில்லையென்று எண்ணுவதோடு இங்கு வருவதற்கு எல்லாவகையிலும் தயாராக இருக்குமாறும் கேட்டுக் கொள்கிறேன்.

ஏப்ரல் இருபதாம் திகதி இங்கிலாந்துக்கு வருவதற்கான விமான டிக்கட்ட அனுப்ப ஏற்பாடு செய்துள்ளேன்.

இப்படிக்கு
அன்புள்ள தம்பி
ஜயசேகர

விமானத்தில் வந்த கடிதத்தை தபாற்காரன் டீச்சர் மாமியின் கையில் கொடுத்தான்.

நடுங்கும் விரல்களால் கடிதத்தை உடைத்து அதில் என்ன தகவல் உள்ளதென்றறிய அவசரப்பட்டார்.

''கமலா சரத் தம்பி எனக்கு இங்கிலாந்துக்கு வரச்சொல்லி கடிதம் அனுப்பியிருக்கான். அடுத்த இருபதாம் திகதிக்கு டிக்கட் வருமாம்''

''ஐயோ அக்கா''

கமலா எதுவும் பேசமுடியாத நிலையில் சற்றுநேரம் பார்த்துக் கொண்டிருந்தாள்.

டீச்சர் மாமி இங்கிலாந்தில் வாழ்வதற்குச் செல்லப் போகும் செய்தி ஒருநாள் கழிவதற்கிடையில் ஊரெங்கும் பரவிவிட்டது.

அது தொடர்பாக பல்வேறு கருத்துக்கள் வெளியாகின.

இந்தத் தகவலை பெரிய பிக்குவிடம் சொல்வதற்காக டீச்சர் மாமி தயாசேனவுடன் விகாரைக்கு சென்றார்.

பிறந்த மண்ணில் சேவை செய்வதைவிட உத்தமமான செயல் வேறெதுவும் இருக்க முடியாதென்பதே பெரிய பிக்குவின் கருத்தாக அமைந்தது.

''அது அப்படித்தான் பெரியசுவாமி. அமெரிக்காவுக்கு இங்கிலாந்துக்கோ சென்று வாழ்வதென்று தான் முதலில் எண்ணினேன். இப்பொழுது ஊர் நல்லது போலுள்ளது. இருந்தாலும், தம்பியின் வேண்டுதலையும் மதிக்க வேண்டுமல்லவா? சுமார் ஒரு வருடம் தான் அங்கு தங்க எதிர்பார்க்கிறேன் சுவாமி''

✧✧✧✧✧✧✧✧✧✧✧

''டீச்சர் மாமி நீங்கள் வெளிநாட்டுக்குச் சென்றால் விகாரையில் ஆரம்பித்த நூல் நிலையம் வேலை ஒழுங்காக நடக்காது. இங்கிலிஷ் வகுப்பும்........''

தயாசேன தொந்தரவு கொடுக்கத் தொடங்கினான்.

''ஒரு வருடம் தானே இருக்கப் போறன்''

''மாமி வெளிநாட்டுக்குப் போனால் செவ்வந்திப் பூ மாமிக்கு இல்லாமல் போகுமே''

வீட்டுக்கு வந்து கதிரையொன்றில் அமர்ந்த டீச்சர் மாமியின் மடியில் புரண்ட செவ்வந்தி செல்லமாகச் சொன்னாள்.

''என்னத்துக்கு செவ்வந்தியென்று சொல்றது?''

''செவ்வந்தியென்று சொல்றது ரோஜாப்பூவுக்கு மாமி''

''உண்மைதான். எனக்கு சின்ன ரோஜாப் பூவொன்று இல்லாமல் போகும் தான்''

அவ்வாறு சொன்ன டீச்சர் மாமி செவ்வந்தியை முத்தமிட்டார்.

# 13



சிவப்பாய்ப் பூத்திருந்த முள்முருங்கைப் பூக்களால் வீதிகள் அழகு பெற்றிருந்தன. இனிமையான குயிலின் கீதம் ஊரெங்கும் கேட்டது. வீட்டுக்கு வீடு சென்ற பிள்ளைகள் சோகி விளையாடவும் ஊஞ்சலாடவும் தொடங்கினார். கிராமத்தின் வாசலுக்கே புத்தாண்டு வருகை தந்திருந்தது.

''மிஸ் எங்கள் வீட்டுக்கு வரணும்''

''புத்தாண்டுக்கு எங்க வீட்டுக்கு வாங்கோவன்''

''நான் மிஸ்ஸை கூட்டிப் போக வந்திருக்கிறேன்''

சந்திக்கிற எல்லோருமே டீச்சர் மாமியை இவ்வாறான அன்புத் தொல்லைக்கு உட்படுத்தினர்.

அயற் கிராமங்களில் இடம் பெற்ற புத்தாண்டுக் கொண்டாட்டங்களுக்குக் கூட, டீச்சர் மாமியை அழைத்தனர். அடிக்கல் நடுவதற்கு, போட்டி நடுவர் குழுவுக்கு, திறப்பு விழாக்களுக்கு இன்னும் இங்கு சொல்லாத பல விடயங்களுக்கும் டீச்சர் மாமியின் பிரசன்னம் தேவைப்பட்டது.

இருபதாம் திகதி டீச்சர் மாமி இங்கிலாந்து செல்லத் தீர்மானித்திருந்தார். ஏப்ரல் பதினைந்தாம் திகதி முற்பகல் பத்துமணிக்கு பிரியாவிடை வைபவமொன்று நடாத்தப் பெண்கள் சங்கம் ஏற்பாடு செய்திருந்தது.

இவ்வைபவத்தில் கலந்து கொள்ளுமாறு பாடசாலை அதிபருக்கும், கோணபுர கனிஷ்ட வித்தியாலய அதிபருக்கும், பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

தங்கள் விளையாட்டுக்களை சற்று மறந்து. நன்றியுள்ள மாணவர்கள் எல்லோருக்கும் முன்பே தர்மசாலைக்கு வந்திருந்தார்கள்.

பத்துமணிக்கெல்லாம் கூட்டம் ஆரம்பமாகியது. பெரிய சுவாமி தலைமை வகித்தார்.

பிள்ளைகள் கலங்கிப் போயிருந்தனர். தங்களது அன்புக்குரிய ஆசிரியை, தங்களிடமிருந்து பிரிந்து தூரதேசத்திற்கே செல்வதை அவர்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. எல்லோருக்கும போல் கைகளிலே வெற்றிலைச் சுருளுடன் காத்திருந்தனர்.

பெண்கள் சங்கத்தின் ஞாபகார்த்த அன்பளிப்பாக பெரிய பொதி யொன்று சிவப்பு நாடாவால் கட்டப்பட்டு வைக்கப்பட்டிருந்தது.

"ஜயசேகர அம்மையார் எங்கள் கிராமத்துக்கு அதிகம் சேவையாற்றி யுள்ளார். முன்னேற்றகரமான பலவிடயங்களுக்கு அத்திவாரமிட்டுள்ளார். இந்தப் பிஞ்சுக் குழந்தைகள் மீது தாய்போல் அன்பு காட்டினார். அவர் இப்பொழுது இங்கிலாந்துக்குச் செல்கிறார். அவரது சேவை பற்றி சிறிது கூற நான் மகாவித்தியாலய அதிபரை அழைக்கிறேன். அவர் நல்ல கருத் துக்களைச் சொல்வார்"

இறுதியாக டீச்சர் மாமி பிரியாவிடை உரை நிகழ்த்தினார்.

"சங்கைக்குரிய எங்கள் பெரிய சுவாமி அவர்களே! இந்த நிகழ்வுக்கு வருகை தந்துள்ள பெரியார்களே, பெற்றார்களோ, இளைஞர் யுவதிகளே, எனதன்புச் சின்னஞ் சிறுவர்களே.....

"நான் இங்குவந்து ஆரம்பித்த பல நடவடிக்கைகளின் பிரதிபலன்களை காண்பதற்கு முன்பே இன்னொரு நாட்டுக்குச் செல்ல வேண்டி நேர்ந்ததை யிட்டு உண்மையிலேயே நான் கவலைப்படுகிறேன். இருந்தாலும்....."

டீச்சர் மாமியின் கண்கள் நிரம்பின. கதையை நிறுத்திவிட்டு சற்று நேரம் வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார். அவரது கண்களிலிருந்து

வழிந்த கண்ணீர்த் துளிகள் கன்னமேட்டில் உருண்டு கீழே விழுந்தன. அவசர அவசரமாக மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்கிக் கொண்டு மீண்டும் பேசுவதற்கு தயாரானார்.

''நான்.... நான்''

சொற்கள் சேர்ந்து வெளிப்படவில்லை.

''என்னுடைய பேச்சை இத்துடன் நிறுத்திக் கொள்கிறேன்''

இந்தச் சில சொற்களைக் கூட மிகச் சிரமத்துடனேயே வெளிப்படுத்தி னார். கைக்குட்டையால் முகத்தைத் துடைத்துக் கொண்டு அருகேயிருந்த கதிரையில் அமர்ந்தார்.

முதல் வெற்றிலைச் சுருளை வழங்க முன்வந்த தயாசேன, இரு கால்களையும் பற்றிப் பிடித்துக் கொண்டு விக்கி விக்கி அழுதான்.

கண்களில் கண்ணீரைத் தேக்கி வைத்துக் கொண்டிருந்த ஏனைய பிள்ளைகளாலும் கவலையை அடக்க முடியவில்லை. அழுகை வெடித்துக் கிளம்பியது.

''போக வேண்டாம் டீச்சர் மாமி''

செவ்வந்தியின் அழுகை பேரோலமாக பரிணமித்தது.

இதயத்திலேற்பட்ட வலியைத் தாங்கிக் கொள்ள இயலாமல் சின்ன பிக்கு தர்மசாலையிலிருந்து மெல்ல வெளியே சென்றார்.

முன்னே வளைந்த டீச்சர் மாமி தன்னிரு கைகளாலும் தயாசேனவை தூக்கிப் பிடித்தார். செவ்வந்தி மாமியின் உடலோடு ஒட்டிக் கொண்டு நின் றாள். சுனிலும் அருகேதான் நின்றான். டீச்சர் மாமி அவர்களின் நெற்றியை முத்தமிட்டபடி, அருகேயிருந்த ஏனைய பிள்ளைகளையும் கை நீட்டி இறுக அணைத்துக் கொண்டார்.

''நீங்கள் எல்லோரும் என்னுடைய குழந்தைகள். நான் உங்களை விட்டுவிட்டுப் போகமாட்டன் பிள்ளைகளே''

பிள்ளைகளை இருகைகளாலும் அணைத்தபடி டீச்சர் மாமியும் விக்கி விக்கி அழ ஆரம்பித்தார்.

# வெற்றியின் பங்காளிகள்



விமலதாஸ முதாகே

தமிழாக்கம்:

திக்குவல்லை கமால்

விமலதாஸ முதாகே சிங்களத்தில் எழுதும் காலிப் பிரதேசத்தைச் சேர்ந்த குறிப்பிடத்தக்கதொரு படைப்பாளி.

இவர் சிறுகதை, கவிதை, இளைஞர் நாவல், சிறுவர் இலக்கியம், மொழி பெயர்ப்பு என்று இதுவரை ஒன்பது நூல்கள் எழுதியுள்ளார்.

சிறுவர் பாடல்களைக் கொண்ட ஒலிநாடாவும் வெளியிட்டுள்ளார். முதன் முதலில் ஒலிநாடாச் சஞ்சிகை வெளியிட்ட பெருமையும் இவரையே சாரும்.

"விமலதாஸ முதாகே இளைஞர்களிடம் கையளிக்கும், வெற்றியின் பங்காளிகள், இளைஞர் இலக்கியத்தின் நோக்கத்தை தெளிவாகப் புரிந்து கொண்டு எழுதப்பட்ட புதிய படைப்பாகும்." என்று பேராசிரியர் பந்துசேன குணசேகர குறிப்பிடுகிறார்.

தமிழ் வாசகர்களுக்கு இதுவோர் அரிய வாய்ப்பாகும்.

தோதென்ன வெளியீடு
ஊஸ்வெவ வீதி, ஆனமடுவ
தோ. பே: 032- 2263446

978-955-1848-26-2

ISBN - 978 - 955 - 1848 - 26 - 2

150/-